# பெரியார் அரசு கலைக்கல்லூரி
கடலூர்

## தமிழ்த்துறை

இளங்கலைத் தமிழிலக்கியம்
தாள்: BATA 13 தமிழக வரலாறும் பண்பாடும்

**அலகு : 1**


பாட ஆசிரியர்
**முனைவர் இரா.முருகன்**
உதவிப்பேராசிரியர்


**பாடநூல் : தமிழக வரலாறும் பண்பாடும்**
**ஆசிரியர் : கே.கே..பிள்ளை**

# தமிழக வரலாறு
# மக்களும் பண்பாடும்

டாக்டர் கே.கே. பிள்ளை



INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

# பொருளடக்கம்


| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1. | தமிழக வரலாற்றுக்கான அடிப்படை ஆதாரங்கள் | 1 |
| 2. | தமிழகத்தின் இயற்கை அமைப்புகள் | 14 |
| 3. | வரலாற்றுக் காலத்துக்கு முந்திய தமிழகம் | 27 |
| 4. | சிந்துவெளி அகழ்வாராய்ச்சி | 40 |
| 5. | பண்டைய தமிழரின் அயல்நாட்டுத் தொடர்கள் | 50 |
| 6. | தமிழ் வளர்த்த சங்கம் | 72 |
| 7. | சங்க இலக்கியம் | 86 |
| 8. | பண்டைத் தமிழரின் வாழ்க்கை | 128 |
| 9. | களப்பிரர்கள் | 184 |
| 10. | பல்லவர்கள் | 189 |
| 11. | தமிழகத்தில் நான்காம் நூற்றாண்டு முதல் ஒன்பதாம் நூற்றண்டு வரையில் சமூக நிலை | 220 |
| 12. | சோழப் பேரரசின் தோற்றம் | 247 |
| 13. | சோழப் பேரரசின் வளர்ச்சியும் வீழ்ச்சியும் | 261 |
| 14. | சோழர் காலத்தில் தமிழரின் சமுதாயம் | 304 |
| 15. | பாண்டியரின் ஏற்றமும் வீழ்ச்சியும் | 375 |
| 16. | மதுரை நாயக்கர்கள் | 401 |
| 17. | தமிழகத்தில் 13 முதல் 18ஆம் நூற்றாண்டு வரை சமூக நிலை | 421 |
| 18. | ஐரோப்பியரின் வரவு | 454 |
| 19. | பத்தொன்பதாம் நூற்றாண்டின் அரசியலும் தமிழகத்தின் சமூக நிலையும் | 478 |
| 20. | இருபதாம் நூற்றாண்டில் தமிழகம் | 508 |
| | மேற்கோள் நூல்கள் | 551 |

## ஒளிப்பட விளக்க அட்டவணை


1. வரலாற்றுக்கு முற்பட்ட சின்னங்கள் (ஆதிச்சநல்லூர்)
2. புதைகுழி (சானூர்)
3. மட்பாண்டச் சின்னங்கள் (அரிக்கமேடு)
4. குளத் தளவரிசை (அரிக்கமேடு)
5. பாண்டவ ரதங்கள் (மாமல்லபுரம்)
6. மூவர் கோயில் (கொடும்பாளூர்)
7. வண்ண ஓவியங்கள் (பனைமலை)
8. திருச்சி மலைக்கோட்டை பல்லவர் குடைவரைக் கோயில் கங்காதரமூர்த்தி
9 காஞ்சி கைலாசநாதர் கோயிலின் தென்கிழக்குத் தோற்றம்
10. தஞ்சைப் பிரகதீசுவரர் கோயில்
11. சண்டேசுவர அனுக்கிரகமூர்த்தி (கங்கை கொண்ட சோழபுரம்)
12. சரசுவதி (கங்கைகொண்ட சோழபுரம்)
13. காஞ்சி வரதராசப் பெருமாள் கோயில்
14. தியாகராசர் கோயில் - கிழக்குக் கோபுரம் (திருவாரூர்)
15. பொன்னம்பலமும் மேற்குக் கோபுரமும் (சிதம்பரம்)
16. நடராசர், சிவகாம சுந்தரி வெண்கலப் படிமங்கள் பிரகதீசுவர் கோயில் (தஞ்சை)
17 பிரகதீசுவர் கோயிலில் சோழர்கால வண்ண ஓவியங்கள் (கி.பி. பத்தாம் நூற்றாண்டு)
18. திருவரங்கம் கோயில் தூணில் காணும் வீரர்களின் சிற்பங்கள்
19. வேலூர்க் கோட்டையின் வடகிழக்குப் பகுதி
20. செஞ்சிக் கோட்டையின் தோற்றம்
21. மதுரை மீனாட்சியம்மன் கோயில்
22. திருவண்ணாமலை அருணாசலேசுவரர் கோயில் குளமும் கோபுரங்களும்
23. செயின்ட் ஜார்ஜ் கோட்டை. - சென்னை

# 1. தமிழக வரலாற்றுக்கான அடிப்படை ஆதாரங்கள்

இந்திய வரலாறும் தென்னிந்திய வரலாறும் இதுவரை பெரும்பாலும் ஆங்கிலத்தில் எழுதப்பட்டுவந்துள்ளன. தமிழில் வெளியாகியுள்ள வரலாறுகள் ஆங்கில மொழியில் வெளி வந்துள்ள வரலாற்று நூல்களின் மொழிபெயர்ப்பாகவோ அன்றித் தழுவல்களாகவோ அமைந்துள்ளன. தமிழ்நாடு தனி யொரு மாநிலமாகப் பிரிந்த பிறகும் அதன் வரலாறு தமிழில் வெளியாகவில்லை. அக் குறையைத் தவிர்க்கும் பொருட்டே இந் நூல் இயற்றப்பட்டுள்ளது. தமிழரின் மரபும், பண்பாடும், தமிழ் மொழியும் காலச் சுழல்களில் சிக்குண்டும், அந்நியக் கலப்புகள் பல வற்றுக்கு உட்பட்டும் சில மாறுதல்களை ஏற்றுக்கொண்டுள்ளன. எனவே, தமிழ்நாட்டு வரலாற்றைத் தனிப்பட்டதொன்றெனக் கருதாமல் இந்திய வரலாற்றுடன் பிணைந்திருப்பதாகவே கொள்ளவேண்டியுள்ளது. வரலாறு கண்ட உண்மைகளைப் புறக் கணிக்காமல் உண்மையை நாடி, நாட்டின் வரலாற்றை உருவாக் குவது தேவை. அஃதேயன்றிப் பழந்தமிழகத்தின் வரலாறானது பண்டைய எகிப்து, பாபிலோனியா, சுமேரியா, ரோம், கிரீசு ஆகிய நாடுகளின் வரலாறுகளுடன் தொடர்பு கொண்டுள்ளது.

பண்டைய நாள்களில், பொதுவாக இந்தியாவிலும், சிறப் பாகத் தமிழகத்திலும் வரலாற்று நிகழ்ச்சிகளை ஏடுகளில் எழுதி வைக்கும் வழக்கத்தை மக்கள் மேற்கொண்டிலர். மிகச் சிறந்த இலக்கியங்களையும் உரைகளையும் படைத்துக் கொடுத்த பழந் தமிழர்கள் வரலாற்று நிகழ்ச்சிகளைக் குறித்துவைக்காமற் போனது வியப்பினும் வியப்பாக உள்ளது. இக் காரணத்தால் வரலாற்று ஆசிரியர்கள் தமிழரின் வரலாறு ஒன்றை எழுதுவதில் பல இடுக்கண்களுக்குட்பட்டு வந்துள்ளனர். ஆழ்ந்த ஆராய்ச்சி யின் பயனாய்த் தமிழகத்தின் வரலாறுகள் உருவாக்கப்பட்டுவந் துள்ளன. பழந்தமிழர்கள் வரலாற்றுக் குறிப்புகளை விட்டுச் செல்லவில்லையே ஒழிய அவர்களுடைய வாழ்க்கைகளைப் பற்றிய புதைபொருட் சின்னங்கள், இலக்கியக் குறிப்புகள் ஆகியவை மிகுதியாகவே நமக்குக் கிடைத்துள்ளன. அவற்றைக்

கொண்டும் அயல்நாட்டு வரலாற்று ஆசிரியர்கள் பண்டைய தமிழர்களைப் பற்றித் தத்தம் நூல்களில் கொடுத்துள்ள குறிப்புகளைக் கொண்டும் பண்டைய தமிழரின் வரலாற்றைப் பற்றியும், பண்பாடு, நாகரிகம் ஆகியவற்றைப்பற்றியும், இயன்றவரை திருத்தமான பண்டைய வரலாறு ஒன்று வகுப்பது அரிதாகத் தோன்றவில்லை.

தமிழக வரலாற்றைக் கீழ்க்காணுமாறு பகுத்துக் கொள்ளலாம்: வரலாற்றுக்கு முற்பட்ட காலம், சங்க காலம், பல்லவர் காலம், பாண்டியர் சோழரின் பேரரசுக் காலம், மத்திய காலம், பிற்காலம் என ஆறு காலங்களாக வரையறுத்துக் கொள்ளலாம். இப் பல்வேறு காலங்களில் வாழ்ந்துவந்த தமிழரின் வாழ்க்கை வரலாறுகளை ஆராய்ந்தறிவதற்கு நமக்கு உதவியுள்ளவை புதை பொருள்கள், சங்க இலக்கியங்கள், தமிழ்நாட்டைப்பற்றி அயல் நாட்டு வரலாற்று நூல்களில் காணப்படும் குறிப்புகள், புராணங் கள், சமய இலக்கியங்கள், கல்வெட்டுகள், நாணயங்கள், முஸ் லிம் வரலாற்று ஆசிரியர்களின் குறிப்புகள், பிரிட்டிஷ் பிரெஞ்சுக் கிழக்கிந்தியக் கம்பெனிகள், அரசாங்கங்கள் ஆகியவற்றின் ஆவ ணங்கள், டச்சு போர்ச்சுகீசியப் பாதிரிகளின் நாட்குறிப்புகள், கடிதங்கள், அறிக்கைகள், புதுச்சேரி ஆனந்தரங்கம் பிள்ளையின் நாட்குறிப்புப் போன்ற ஆவணங்கள் ஆகியவையாம். பிற்கால வரலாற்றிற்கு இந்திய விவரங்களின் ஆவணங்கள் மிகப் பயன் படுகின்றன. தமிழகத்தில் கோயில்களிலும் குகைகளிலும் அமைக் கப்பட்டுள்ள சிற்பங்களும் தீட்டப்பட்டுள்ள ஓவியங்களும் அவ்வக் காலத்து மக்களின் கலை வளர்ச்சியை எடுத்துக்காட்டு கின்றன. ஆகையால், வரலாறு எழுதும் முயற்சிக்கு அவை பெரிதும் துணைபுரிகின்றன.

இலக்கியங்களும் புராணங்களும் அளிக்கும் சான்றுகளை விடப் புதைபொருள்களும், கல்வெட்டுகளும், நாணயங்களும் அளிக்கும் சான்றுகள் பெரிதும் நம்பத்தகுந்தவையாக உள்ளன. ஆனால், விரிவான வரலாறு ஒன்று எழுதுவதற்கு இவையும் போதுமானவை என்று கூறமுடியாது. தமிழகத்தில் கண்டெடுக் கப்பட்ட கல்வெட்டுகளில் முப்பதினாயிரத்துக்கு மேற்பட்டவை இன்னும் பதிப்பிக்கப்படாமலே உள்ளன. அவை வெளியாக் கக்கூடிய செய்திகள் இப்போது தொகுக்கப்பட்டுள்ள செய்தி களுக்கு முரண்பாடாகவும், விளக்கங் கொடுக்கக்கூடியன வாகவும், கூடுதலான தகவல்கள் அளிக்கக்கூடியனவாகவும் இருக்கக்கூடும். நாணயங்கள் அளிக்கும் சான்றுகளும் முழுமை யானவையல்ல. பல நாணய வரிசைகட்குக் காலங்கணித்தல்

எளிதாகத் தோன்றவில்லை; அதில் பல கருத்து வேறுபாடுகளும் உண்டு. ஆனால், சங்க கால வரலாற்றுக்கு நாணயங்கள் புரிந்துள்ள உதவி மதிப்பிடற்கரியதாகும். தாம் அளிக்கும் சான்றுகளுடன் அவை சங்க இலக்கியச் செய்திகள் பலவற்றையும் மெய்ப்பிக்கின்றன. ஆனால், இந் நாணயங்களில் பெரும்பான்மையன அந்நிய நாட்டு நாணயங்கள் ஆம்.

தமிழக வரலாற்றைத் தொகுக்க உதவும் கல்வெட்டுகள் பல்லவர் காலத்தில்தான் தொடங்குகின்றன. அதற்கு முன்பு நடுகற்கள் ஆங்காங்குத் தமிழகத்தில் இருந்தனவென்றும், மக்கள் அவற்றை வழிபட்டு வந்தனர் என்றும் சங்க இலக்கியங்கள் கூறுகின்றன. அவற்றுள் ஒன்றேனும் இப்போது கிடைக்கவில்லை. பல்லவர்கள் காலத்திய கல்வெட்டுகள் ஏழு, எட்டாம் நூற்றாண்டில் அமைக்கப்பட்டவை. முதலில் அவை கிரந்த எழுத்துகளில் பொறிக்கப்பட்டன. பிறகு அவற்றில் ,தமிழ்மொழிக் கலப்புத் தோன்றுகின்றது. மரபுதமிழ் எழுத்து என்றும், வட்டெழுத்து என்றும் தமிழ் எழுத்துகள் இரு வகையாக ஆளப்பட்டுள்ளன. இவ்விரு எழுத்து வரிவடிவங்கட்கும் தோற்றுவாய் இன்னதென இன்னும் அறியக்கூடவில்லை. ஆனால், வட்டெழுத்துகள் 9 ஆம் நூற்றாண்டிலேயே தமிழகத்தினின்றும் வழக்கொழிந்து மறைந்து விட்டன. தொடர்ந்து சிறிது காலம் அவை சேர நாட்டில் வழக்கில் இருந்துவந்தன. 7ஆம் நூற்றாண்டிலிருந்து கல்வெட்டுச் சாசனங்கள் நூற்றுக்கணக்கில் தமிழகம் முழுவதிலும் கிடைத்துள்ளன. பாண்டியர் சோழர் காலத்திய வரலாற்றைத் தொகுப்பதற்கும் அவர் காலத்திய மக்கள் சமுதாயத்தின் நிலையை அறிந்து கொள்ளுவதற்கும் கல்வெட்டுகளேயன்றி அக் காலத்துப் பொறித்து அளிக்கப்பெற்ற செப்பேட்டுப் பட்டயங்களும் பெரிதும் துணை புரிகின்றன. வேள்விக்குடிச் செப்பேடுகளும், பெரிய சின்னமனூர்ச் செப்பேடுகளும் கிடைத்திராமற் போனால் ஏழு முதல் பத்தாம் நூற்றாண்டு வரையிலான பண்டைய பாண்டியர் வரலாறும், களப்பிரரைப்பற்றிய சில தகவல்களும் நம் கைக்கு எட்டியிரா. அதைப் போலவே பல்லவ மன்னன் சிம்ம விஷ்ணுவின் பரம்பரையைப்பற்றிய குறிப்புகளும் சில செப்பேடுகளின் மூலமாகவே அறியக்கிடக்கின்றன.

தமிழக வரலாறு ஒன்று எழுதுவதற்குத் துணைபுரிந்துள்ள சான்றுகளைக் காலப் பகுப்பின்படியே சீர்தூக்கி ஆராய்வோம்.

**வரலாற்றுக்கு முற்பட்ட காலம்:** சிந்துவெளி அகழ்வாராய்ச்சிகளுக்குப் பிறகு தமிழரின் வரலாறும் நாகரிகமும் புதிய கோணங்

களிலிருந்து நோக்கப்பட்டு வருகின்றன. சிந்துவெளி நாகரிகம் பண்டைய தமிழரால் வளர்க்கப்பட்டது அன்று என்று அண்மையில் சில ஆய்வாளர்கள் தம் கருத்துகளை வெளியிட்டு வருகின்றனர். எனினும், அந் நாகரிகத்தைப்பற்றிய ஆய்வுகள் புதுமுறை விஞ்ஞான சாதனங்களின் துணையுடன் நடைபெற்று வருகின்றன. மொகஞ்சதாரோ, ஹாரப்பா மக்கள் கையாண்ட எழுத்துகளில் மறைந்து கிடக்கும் செய்திகள் இன்னும் வெளியாக வில்லை; அவர்களுடைய எழுத்து முறைகட்கும் இந்தோ ஐரோப்பிய எழுத்து முறைகட்கும் ஒரு தொடர்பைக் கற்பிக்கும் ஆய்வுகளும் அறிஞர் ஒப்புக்கொள்ளும் அளவுக்கு விளக்கமாக இல. எனவே, சிந்துவெளி நாகரிகம் இன்ன மரபினதெனத் தெளி வாகும் வரையில் ஹிராஸ் பாதிரியாரின் கொள்கையையே நாமும் தொடர்ந்து மேற்கொண்டு வரவேண்டியுள்ளது. ஹாரப்பா எழுத்துகளுக்கும் தமிழ் எழுத்துகளுக்கும் தொடர்பு உண்டென்று அவர் கருதினார்.

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் தமிழகத்தில் வாழ்ந் திருந்த மக்கள் பெரிய பெரிய பெருங்கற்குழிகளில் (பாழிகளில்) பிணங்களைப் புதைக்கும் வழக்கத்தை மேற்கொண்டிருந்தனர். இக் குழிகளில் பலவகையான இரும்புக் கருவிகளும் சக்கரத்தைக் கொண்டு வனையப்பட்ட மட்பாண்டங்களும் புதைக்கப் பட்டுள்ளன. இத்தகைய புதைகுழிகள் மேற்காசிய நாடுகளிலும், வடஆப்பிரிக்காவிலும், சில ஐரோப்பிய நாடுகளிலும் காணப்படு கின்றன. அவற்றுக்கும், தமிழகத்துக் குழிகட்கும் பல ஒற்று மைகள் தோன்றுகின்றன. ஆதிச்சநல்லூரிலும் புதுச்சேரிப் பகுதி யிலும் கண்டெடுக்கப்பட்ட புதைபொருள்களுள் பல சைப்ரஸ் தீவிலுள்ள 'என்கோமி' என்னும் இடத்திலும், பாலஸ்தீனத்தி லுள்ள காஸா, ஜெரார் என்னும் இடங்களிலும் கண்டெடுக்கப் பட்ட புதைபொருள்களைப் போலவே காணப்படுகின்றன. இவற்றையெல்லாங் கொண்டு பழந்தமிழ் மக்களின் வாழ்க்கை நிலைகளையும் குடிப் பெயர்ச்சிகளையும் ஒருவாறு நுனித் தறியலாம்.

**சங்க காலம் :** இக்காலத்து மக்களின் வாழ்க்கை முறை களையும் பண்பாடுகளையும் அறிந்துகொள்வதற்குச் சங்க இலக்கியங்கள் பெரிதும் பயன்படுகின்றன. அவற்றில் மன்னர் களின் பெயர்கள் பல காணப்படுகின்றனவாயினும் அவர்கள் வாழ்ந்த காலத்தை அறிந்துகொள்வதற்குக் கல்வெட்டுகள் காணப்படவில்லை. தமிழகத்தில் சில இடங்களில் ரோமாபுரி நாணயங்கள் கிடைத்துள்ளன. அரிக்கமேட்டுஅகழ்வாராய்ச்சியில்

கி.பி. முதல், இரண்டாம் நூற்றாண்டு ரோமாபுரி நாணயங்கள் கிடைத்துள்ளன. அந் நூற்றாண்டுகளில் தமிழகத்துக்கும் ரோமாபுரிக்குமிடையே நடைபெற்றுவந்த செழிப்பான வாணிகத்துக்கு அவை சான்று பகர்கின்றன. இவ் வாணிகத்தைப் பற்றிய சில அரிய செய்திகளை 'எரித்திரியக் கடலின் பெரிப்ளூஸ்' (Periplus of the Erithraean Sea) என்னும் ஒரு கிரேக்க நூலின் மூலமாகவும் அறிகின்றோம். பழம் பாண்டிய மன்னரின் நாணயங்கள் சில சதுரவடிவிலும், நீண்டசதுர வடிவிலும் கிடைத்துள்ளன. இவற்றில் ஒருபுறம் மீன் சின்னமும், பின்புறம் யானை அல்லது காளைமாட்டுச் சின்னமும் பொறிக்கப்பட்டுள்ளன. இவை கி.மு. இரண்டாம் நூற்றாண்டு முதல் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு வரையிலான கால அளவில் வெளியிடப்பட்டிருக்க வேண்டும் எனத் தெரிகின்றது. பூம்புகாரில் அகழ்வாராய்ச்சிகள் நடைபெற்றுள்ளன. அவற்றைக்கொண்டு சில வரலாற்றுக் குறிப்புகளும் தொகுக்கப்பட்டு வெளியாகியுள்ளன.

**பல்லவர் காலம் :** சங்க காலம் முடிவடைந்த பிறகு சுமார் முந்நூறு ஆண்டுக்காலம் தமிழகத்தில் என்ன நேர்ந்தது என்று அறிய முடியவில்லை. தமிழக வரலாற்றில் இதை ஓர் இருண்ட காலம் என்று குறிப்பிடுவதுண்டு. அக் காலத்தில் நிகழ்ந்த செய்திகளுக்கு உடன்காலச் சான்றுகள் கிடைத்திலவேனும், அம் மூன்று நூற்றாண்டுகளில் தமிழகத்தில் மாபெரும் அரசியல், சமய, மொழி மாறுதல்கள் தோன்றி, தமிழரின் வாழ்வையும் நாகரிகத்தையும் பல புதிய திருப்பங்கட்கு உட்படுத்தின என்பதை ஊகித்தறியலாம். அவ்விருண்ட காலத்தில் களப்பிரரால் ஏற்பட்ட அரசியல் மாறுதலுக்கு வேள்விக்குடிச் செப்பேடுகள் (கி.பி. 768) சான்று பகர்கின்றன. அக் களப்பிரர் காலத்தில் சமண பௌத்த சமயங்கள் தமிழகத்தில் மிகப் பெருமளவு வளர்ச்சியுற்றன. மதுரையில் சமண முனிவர் வச்சிரநந்தி என்பார் தமிழ்ச்சங்கம் ஒன்றைத் தோற்றுவித்து அதன் மூலம் சமண சமய இலக்கியங்களைத் தமிழில் பெருக்கி அதற்கு வளமூட்டினார். சோழ நாட்டில் அச்சுத விக்கந்தன் என்ற பௌத்த மன்னன் பௌத்த விகாரைகளை அமைத்தும், பௌத்த சமய நூல்களை இயற்றுவித்தும் பௌத்த சமயத்தின் வளர்ச்சியை ஊக்குவித்துக் கொண்டிருந்தான். அவன் 'களப்ப குல'த்தைச் சார்ந்தவன். களப்பிரரைப்பற்றி அறிவதற்குக் கன்னட நாட்டுக் கல்வெட்டுகள் சிலவும் பயன்படுகின்றன. சிலர் வேறு கருத்துகளை வெளியிட்ட போதும் களப்பிரர் கன்னட நாட்டிலிருந்ததாகவே தோன்றுகின்றது.

## தமிழகத்துக் கல்வெட்டுகளும் செப்பேடுகளும்

கல்வெட்டுகள் தமிழகத்தில் ஏறத்தாழ கி.மு. இரண்டாம் நூற்றாண்டு முதல் காணப்படுகின்றன. பிராமிக் கல்வெட்டுகள் என்று கருதப்பட்டுவந்த இவற்றைச் சுமார் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டுவரையுள்ள காலத்தைச் சார்ந்தவையெனக் கருதலாம். இவை பெரும்பாலும், தென் ஆர்க்காடு, திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களிலும், கேரள நாட்டின் மேற்குப் பகுதிகளிலும் காணப்படுகின்றன. குறிப்பாகத் திருப்பரங்குன்றம், பிள்ளையார்பட்டி, சித்தன்னவாசல், புகளூர், சிங்கவரம் (ஸ்ரீநாதர்குன்று) ஆகிய ஊர்களில் இவற்றை இன்றும் காணலாம். இவை தவிர, பெயர் பொறிக்கப்பட்ட மண்பாண்டங்கள் திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலும் அரிக்கமேட்டிலும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

அக்காலத்தில் பயன்படுத்தப்பட்ட எழுத்து யாது என்பது பற்றிக் கருத்து வேற்றுமைகள் உள. அதை அசோக எழுத்து அல்லது ஒருதர மாறுபட்ட பிராமி என்று முன்னாள் ஆராய்ச்சியாளர் பலரும் கருதினர். ஆனால், தற்போதைய கருத்து வேறுபட்டுள்ளது. அது பிராமி எழுத்தன்று என்றும் தாமிளி அல்லது திராவிடி என்ற லிபி எனவும் ஒரு சிலர் கருதுகின்றனர். இவற்றில் கையாண்டிருக்கும் மொழி பழைய தமிழேயாகும்.

பல்லவர் காலத்திலும் அதற்குப் பின்னும் பற்பல கோயில்களில் கல்வெட்டுகள் தோன்றியுள்ளன. எடுத்துக்காட்டாக, மாமல்லபுரம், மகேந்திரவாடி, பல்லாவரம், மேலச்சேரி, மண்டகப்பட்டு, தளவானூர், திருச்சிராப்பள்ளி, வல்லம் ஆகியவற்றிலுள்ள கோயில்களில் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இவற்றில் கையாளப்பட்ட லிபி பல்லவ கிரந்தம் எனப்படுவது; அதனைப் பிராமியைச் சார்ந்த ஒருவகை லிபியெனக் கருதலாம். இந்த லிபியில் சில மாற்றங்களடைந்த பல்லவ கிரந்த லிபியும், நாகரி எழுத்துகளும் கி.பி. ஏழாவது நூற்றாண்டில் ஆண்ட இராசசிம்மனின் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன.

தமிழ்நாட்டில் செப்புப் பட்டயங்கள் சில தோன்றியுள்ளன. அவற்றுள் இருமொழிகளில் பொறிக்கப்பட்ட சாசனங்கள் மிகப் பல. இரண்டாம் சிம்மவர்மனின் (சுமார் கி.பி. 550) ஆறாம் ஆட்சி ஆண்டில் அளிக்கப்பட்ட பள்ளன்கோயில் செப்புப் பட்டயங்கள் முதன்முதலாக வடமொழியும் தமிழும் கலந்தவை. அவற்றைத் தொடர்ந்து பற்பல செப்புப் பட்டயங்கள் தோன்றலாயின. அவை கூரம், புல்லூர், பட்டத்தாள் மங்கலம், தண்டந்

தோட்டம், காசக்குடி, பாகூர், வேலூர்ப்பாளையம் ஆகிய இடங்களில் கிடைத்தவை. இவை ஏறத்தாழ கி.பி. 8, 9 ஆம் நூற்றாண்டுகளைச் சார்ந்தவை எனலாம். இக்காலம் முதல், பாண்டிய சோழ சாசனங்களில் வட்டெழுத்துகள் பயன்படுத்தப் பட்டுள்ளன.

சோழப் பேரரசு காலத்தில் தோன்றிய செப்பேட்டுச் சாசனங்கள் மிகப் பெரியவை. அவற்றுள் கூறப்படும் மெய்க் கீர்த்திகள் மிக விரிவானவை. இக்காலச் செப்பேடுகளில் மாபெரும் செப்பேடு திருவாலங்காட்டுச் செப்பேடேயாகும்.

செப்பேடுகள் பொதுவாக வாழ்த்துப் பாடல்களுடன் (மங்கள சுலோகங்களுடன்) தொடங்கின. அதைத் தொடர்ந்து, கொடையளித்தவரின் மெய்க்கீர்த்தி, அவரது பண்டைய அரச பரம்பரையின் வரலாறு ஆகியவை இடம்பெற்றன. அதற்குப் பின் நன்கொடையின் முழு விவரமும், நன்கொடை பெறுபவரின் முழுப் பெயரும், வரலாறும் குறிப்பிடப்பட்டிருந்தன. அவ்வறத்தினை அழித்தார் அடையும் இன்னல்களைக் கூறும் சாப வாசகங்களும் இடம்பெற்றன.

கல்வெட்டுகளும் செப்பேடுகளும் நாட்டின் வரலாற்றிற்குப் பேருதவி அளிக்கும் அடிப்படை ஆதாரங்கள் எனலாம். மக்களிடமிருந்து அரசாங்கம் பெற்ற வரிகள், கோயில் அலுவலாளர்களின் தனித்தனி வேலைகள், கோயிலைச் சார்ந்த நகைகள், சொத்துகள் முதலியவற்றின் விவரங்கள் காணப்படுகின்றன. கல்வெட்டுகள் தூண்களிலும், சுவர்களிலும், கல்தளங்களிலும், தனிப் பாறைகளிலும் காணப்படுகின்றன. இசைபற்றிய ஒரு சிறந்த கட்டுரை முழுவதும் புதுக்கோட்டையிலுள்ள குடுமியான் மலைப்பாறை ஒன்றில் பொறிக்கப்பட்டுள்ளது. அது மிகவும் வியப்புக்குரியது. சில கல்வெட்டுகள் நினைவுச் சின்னங்களாக அமைக்கப்பட்டிருந்தன. தமிழகத்தில் ஏறக்குறைய 25,000 கல்வெட்டுகள் இருக்கலாம் எனக் கருதப்படுகிறது. சில கல்வெட்டுகள் மன்னர்களின் செயல்களையும் கைங்கரியங்களையும் மிகைபடக் கூறியுள்ளன.

களப்பிரர் காலம் முடிந்து பல்லவர்களின் ஆட்சி தொடங்கின பிற்காலத்தைப்பற்றிப் பல வரலாற்றுச் சான்றுகள் கிடைக்கத் தொடங்குகின்றன. வரலாற்றுத் தொடரும் ஒழுங்காக இடையீடின்றிச் செல்லுகின்றது. பல்லவர் காலத்திய கல்வெட்டுகள், செப்புப் பட்டயங்கள், குகைக்கோயில்கள், கற்றளிகள், ஏரிகள்,

தமிழ் இலக்கியப் படைப்புகள், தேவாரப் பாடல்கள், நாலாயிரத் திவ்வியப் பிரபந்தப் பாடல்கள், சிற்பங்கள், சுவரோவியங்கள், பண்ணிசைக் குறிப்புகள் ஆகியவை அக்காலத்தைப் பற்றிய செய்திகள் பலவற்றை அறிந்துகொள்ள உதவுகின்றன. ஹியூன்சாங் என்ற சீனப் பயணியின் பயணக் குறிப்புகளில் (கி.பி. 641-2) பல்லவர் காலத்தைப்பற்றிய சில குறிப்புகள் உள்ளன.

**பாண்டிய சோழப் பேரரசுக் காலம்:** இக்காலத்திய தமிழகத்து வரலாற்றை ஆராய்ந்து கோவைப்பட எழுதுவதற்கு எண்ணற்ற கல்வெட்டுகள், செப்பேட்டுப் பட்டயங்கள், நடுகற்கள், தமிழ் இலக்கியங்கள், இலக்கணங்கள், கோயிற் சிற்பங்கள், சுவர் ஓவியங்கள், மன்னர்கள் வெளியிட்ட நாணயங்கள், சீனம், அரேபிய நாட்டு மொழி நூல்கள் சிலவற்றுள் காணப்படும் குறிப்புகள் நமக்குத் துணைபுரிகின்றன. செப்பேட்டுப் பட்டயங்களில் லீடன் பட்டயங்கள், திருவாலங்காட்டுப் பட்டயங்கள், கரந்தைப் பட்டயங்கள், சாரளாப் பட்டயங்கள் சிறப்பானவை. கல்வெட்டுகள் அளிக்கும் செய்திகளின் வரலாற்று மதிப்பை அளவிட முடியாது. தஞ்சைப் பெரிய கோயில் கல்வெட்டுகளும், திருமுக்கூடல், உத்தரமேரூர், திருவொற்றியூர் ஆகிய இடங்களில் காணப்படும் கல்வெட்டுகளும், மன்னர்கள், மக்கள் ஆகியவர்களின் வாழ்க்கையைத் தெற்றென எடுத்துக்காட்டுகின்றன. சோழ மன்னர்களின் வரலாற்றுச் செய்திகளைத் தெரிவிக்கும் கல்வெட்டுகள் சிங்களத்திலும், சாவகத்திலும், சுமத்திராவிலும், பர்மாவிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. சீனத்தில் சுவான் செள என்னும் ஊரில் ஒரு கோயிலில் கசேந்திர மோட்சம், உரலில் பிணிக்கப்பட்ட கண்ணன் ஆகிய சிற்பங்கள் காணப்படுகின்றன.

வரலாற்றுத் தொடர்புடைய தமிழ் இலக்கியங்களுள் கலிங்கத்துப் பரணி, மூவருலா, குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ், குலோத்துங்கன் கோவை, பெரிய புராணம், வைணவ மரபையொட்டிய குருபரம்பரை, சீரங்கம் கோயிலொழுகு, மதுரைத் தல வரலாறு, கேரளோற்பத்தி ஆகியவற்றைக் குறிப்பிடலாம். ஆனால், இவையனைத்தும் நம்பக்கூடியனவென்றோ வரலாற்றுக்குப் பயன் உடையவை என்றோ கருத முடியாது. அவற்றுள் காணப்படும் சிற்சில கருத்துகள் வரலாற்றுப் பயன் உடையவையாம்.

சீனக் கடலோரத்திலும் பாரசீக வளைகுடாவிலும் தமிழக வணிகரின் குடியிருப்புகள் அமைந்திருக்கவேண்டும்.என அறிகின்

றோம். சீனத்துக்கு அனுப்பப்பட்ட சோழரின் தூதுகளைப்பற்றிய குறிப்புகள் சீன நாட்டின் 'சாங்' வரலாறுகளில் கிடைக்கின்றன. இவை முதலாம் இராசராசன், முதலாம் குலோத்துங்கன் ஆகிய மன்னரின் காலத்தவை. சீனப் பயணியான சா-ஜூ-குவா (கி.பி. 1225) இச் செய்திகளை மெய்ப்பித்துள்ளார். அராபிய எழுத்தாளரான இபுனே ஹாக்கால், ஈஸ்டாக்கி என்பவர்கள் தமிழகம் அரபு நாடுகளுடன் கொண்டிருந்த வாணிகத் தொடர்பு களைத் தம் நூல்களில் எடுத்துக் கூறியுள்ளனர். சிங்களத்து வரலாற்று நூலான மகாவமிசத்திலும் தமிழகத்தைப் பற்றிய தகவல்கள் கிடைக்கின்றன. வெனிஸ் பயணி மார்க்கோ போலோ (சுமார் கி. பி. 1293) தென்னிந்தியாவைப்பற்றித் தரும் செய்திகள் வியக்கத்தக்கனவாம்.

சோழர் காலத்தில் பொன் நாணயங்களும் இதர நாணயங் களும் வெளியிடப்பட்டன. உத்தம சோழன், இரண்டாம் ஆதித்தன், முதலாம் இராசேந்திரன், முதலாம் இராசாதிராசன் முதலிய சோழ மன்னரின் நாணயங்கள் பல கிடைத்துள்ளன. சோழர் காலத்திய கல்வெட்டுகளில் பல நாணயங்களின் பெயர்கள் காணப்படுகின்றன. ஆனால், அவற்றில் பல இப்போது கிடைக்கவில்லை.

சோழர் காலத்திலும் பாண்டியர் காலத்திலும் புகழ் பெற்ற கோயில்கள் பல எழுப்பப்பட்டன; பல கோயில்கள் விரிவாக் கப்பட்டன. இசையும் நாட்டியக் கலையும் மிக உயர்நிலையை எட்டிப்பிடித்திருந்தன. ஓவியம், சிற்பம் ஆகிய கலைகள் அப் போது அடைந்திருந்த சீரும் சிறப்பும் என்றுமே எய்தியிருந்தன வல்ல என்று திட்டமாகக் கூறலாம். குறிப்பாகச் சோழர் காலத் துக் கோயில்களின் அமைப்பு, படிவங்களின் சிறப்புகள் முதலிய வற்றைப்பற்றியும் நன்கு அறிய முடிகின்றது.

**மத்திய காலம் :** விசயநகரப் பேரரசின் எழுச்சியும் முடிவும், மதுரைப் பாண்டியரின் வீழ்ச்சியும், மதுரை நாயக்கர் ஆட்சியின் தோற்றமும் முடிவும் மத்திய காலம் என்ற பகுப்பில் அடங்குகின் றன. இக்காலத்திய அரசியல், சமய நிலை, சமூக நிலை, கலை வளர்ச்சி ஆகியவற்றைப்பற்றிய செய்திகள் நமக்குப் பல துறை களில் கிடைக்கின்றன. கல்வெட்டுகள், செப்பேடுகள், நாணயங் கள், இலக்கியங்கள், கிறித்தவப் பாதிரிமாரின் அறிக்கைகள், கடிதங்கள், கங்காதேவியின் 'மதுரா விசயம்', கொங்கு தேச இராசாக்களின் சரித்திரம், இபின் பத்துதா (1304-78) என்ற

முஸ்லிம் பயணியின் பயணக் குறிப்புகள் ஆகியவற்றின் மூலம் கிடைக்கக்கூடிய செய்திகளைக் கொண்டு கோவையான வரலாற்றை எழுதக்கூடும்.

**பிற்காலம்** : கிழக்கிந்தியக் கம்பெனி இந்திய மண்ணில் கால் எடுத்து வைத்தது முதல் தற்காலம்வரையிலான காலப் பகுதியைப் பிற்காலம் என்று குறிப்பிடுகின்றோம். இந்தியாவுடன் வாணிகம் செய்யவந்த ஐரோப்பியக் கம்பெனிகளின் ஆவணங்கள், பிரிட்டிஷ், பிரெஞ்சு அரசாங்கங்களின் ஆவணங்கள், ஆனந்தரங்கம் பிள்ளையின் நாட்குறிப்பு, சிலரின் வாழ்க்கை வரலாறுகள் முதலியவை வரலாற்றுக் களஞ்சியங்களாக உதவுகின்றன. இவையேயன்றி, ராபர்ட் ஆர்மி (Orme) எழுதிவைத்த 'இராணுவ நடவடிக்கைகள்' என்னும் நூலும், மக்கன்ஸியின் கையேட்டுப் படிகளும் 19ஆம் நூற்றாண்டில் தமிழகத்தின் அரசியல், சமுதாய நிலைகளை அறிந்துகொள்வதற்குப் பயன்படுகின்றன. இவ் வெளிநாட்டு அறிஞர்கள் செவிவழிக் கேட்டவற்றை ஒட்டி எழுதியுள்ளவை யாவற்றையும் நம்ப முடியாது.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழகத்தின் மாவட்டங்கள் ஒவ்வொன்றுக்கும் குறிப்புச் சுவடிகள் (Gazetteers) வெளியிடப்பட்டன. இங்கிலாந்திலுள்ள அரசு ஆவணக்களரியிலும், சென்னையிலுள்ள அரசு ஆவணக்களரியிலும் (Record Office) உள்ள பல கையேட்டுச் சுவடிகள் அண்மைக்காலத்தின் வரலாற்றை எழுதுவதற்குப் பயன்படுமாறு சேமித்து வைக்கப்பட்டுள்ளன. பாரத நாடு விடுதலை பெற்ற பின் அரசாங்க ஆவணங்கள் மிகப் பயன்படுகின்றன.

இருபதாம் நூற்றாண்டு நடந்துகொண்டிருக்கிறது. அவ்வப்போது அதன் வரலாறு நூல்களிலும், செய்தித்தாள்களிலும் எழுதப்பட்டு வருகின்றன. தந்தியும், தொலைபேசியும், புகைப்படம் எடுக்கும் கருவிகளும், வானொலியும், தமிழக வரலாறு நிகழ்ந்துகொண்டிருக்கும்போதே அவற்றைப் பதிவு செய்துவைக்கத் துணைபுரிந்து வருகின்றன.

## நாகரிகமும் பண்பாடும்

உலக நாடுகள் ஒவ்வொன்றுக்கும் ஒரு வரலாறு உண்டு. மக்கள் சமுதாயத்தைப்பற்றிய செய்திகள் வரலாற்று நூல்களில் இடம் பெறும். அண்மைக் காலம் வரையில் மன்னர்களைப் பற்றிய செய்திகள் மட்டும் வரலாற்று நூல்களில் இடம் பெற்று

வந்தன. மன்னரின் கல்வி, கலைத்திறன், அவர்களுடைய விருப்பு வெறுப்புகள், அவர்கள் புரிந்துகொண்ட திருமணங்கள், நிகழ்த்திய போர்கள், கண்ட வெற்றி தோல்விகள் ஆகிய வற்றையே வரலாற்று ஆசிரியர்கள் தம் நூல்களில் குறிப்பிடுவது வழக்கமாக இருந்து வந்தது. ஆனால், மன்னரின் ஆட்சிக்கு உட்பட்டு அவர்களுடைய செங்கோன்மை அல்லது கொடுங் கோன்மையின் விளைவாக ஏற்படும் இன்ப துன்பங்களை நுகர் பவர்கள் நாட்டின் குடிமக்களாவர்.

காலச் சுழற்சியில் 'வரலாறு' என்னும் சொல்லுக்குப் புதிய விளக்கங்கள் எழுந்தன. உலகில் மக்களிடையே விஞ்ஞானம், தொழில், தொழில்நுட்பம், தத்துவம், இலக்கியம் ஆகிய துறை களில் கருத்துப் புரட்சிகள் தோன்றிக்கொண்டே இருக்கின்றன. மக்கள் சமுதாயத்தின் வரலாற்றில் அரசர்களும் அரசியலும் ஏற்கும் பங்கு ஒரு சிறிதளவுதான். மக்கள் வாழ்க்கை பலதுறைப் பட்டது; பன்முக வைரமணி போன்றது. ஆகையால், அரசாங்க வரலாறு மட்டுமன்றி மக்களின் வாழ்க்கை வரலாற்றைப்பற்றியும் அறிந்துகொள்ளுவது சாலச் சிறந்ததாகும்.

மக்கள் மேற்கொள்ள வேண்டிய பொறுப்புகள் பல உண்டு. பசி என்பது மனிதனின் அடிப்படையான, அடக்க முடியாத உணர்ச்சியாகும். பசியாற்றிக்கொள்ளும் பெரு முயற்சியில் மனிதன் இடைவிடாது உழன்றுகொண்டிருக்கிறான். இம் முயற்சியை விளக்கிக் கூறுவது 'பொருளியல்' என்பதாகும். உலகில் சமயங்கள் பல தோன்றி வளர்ந்து வந்துள்ளன; பல மறைந்துபோயுள்ளன. மக்கள் சமயங்களில் கொண்டுள்ள ஈடுபாட்டை எடுத்துக் கூறுவது 'சமய வரலாறு.' நாட்டின் மொழி வளர்ச்சியையும், இலக்கிய வளர்ச்சியையும், கருத்துப் புரட்சிகளையும் எடுத்துக் கூறுவது 'இலக்கிய வரலாறு' ஆகும்.

அரசர்களின் வாழ்க்கைக் குறிப்புகளை மட்டும் விளக்கிக் கூறும் வரலாறுகள் இன்று செல்வாக்கிழந்துவிட்டன. மன்னர்கள் ஒருவரோடொருவர் பூசலிட்டுப் போராடி, மாண்டுபோன செய்திகள் மக்கள் மனங்களுக்குப் புளித்துவிட்டன. நாட்டு மக்களின் வாழ்க்கை முறைகள், பண்பாடுகள் முதலியவற்றைப் பற்றிய ஆராய்ச்சியை மேற்கொள்ள வரலாற்று ஆய்வாளரிடம் ஆவல் மேலிட்டு வருகின்றது. வரலாற்று நூல்கள் எழுதுவதில் புதிய முறைகள் கையாளப்பட்டு வருகின்றன. நாட்டின் இயற்கை யமைப்பு, இயற்கை வளங்கள், இவற்றுடன் அந்நாட்டுக் குடிமக்களின் வாழ்க்கை இயல்புகளுக்கு ஏற்பட்டுள்ள

தொடர்புகள், சமுதாயத்தில் காணப்படும் மக்களினப் பிரிவுகள், மொழி வளர்ச்சி, இலக்கியம், கலைகள் ஆகியவற்றின் வளர்ச்சி, பொருள் பெருக்கம், அரசியல் ஆக்கம், குடிமக்கள் உண்ணும் உணவு, அணியும் ஆடை, பூணும் அணிகள், அவர்களுடைய ஒழுக்கங்கள், சமயங்கள், குடிநலக் கூறுகளான நல்வாழ்வுக் கழகங்கள் ஆகியவற்றைப்பற்றிக் கூறவும் வரலாறுகள் இப்போது முனைந்து வருகின்றன.

நாகரிகம், பண்பாடு ஆகியவற்றின் வளர்ச்சியில், உலக வரலாற்றில் தமிழ் மக்கள் ஏற்றுக்கொண்டுள்ள பங்கை ஆய்ந்து விளக்குவதே இந் நூலின் நோக்கமாகும். தமிழ்ச் சமுதாயம் மிகவும் பழமையான ஒன்றாகும். பண்டைய எகிப்து, பாபிலோனியா, கிரீசு, ரோம் ஆகிய நாடுகள் நாகரிகத்தில் மிகவும் சிறந்து விளங்கிய பண்டைக் காலத்திலேயே தமக்கென ஒரு நாகரிகத்தையும் சிறந்த பண்பாட்டையும் வளர்த்து வாழ்ந்து வந்தவர்கள் தமிழர்கள். இந்திய நாட்டு வரலாற்றில் இதுவரையில் தமிழகத்துக்குச் சிறப்பிடம் அளிக்கப்படவில்லை. தமிழ்நாடு என்று ஒரு நாடு இருப்பதாகவே வரலாற்று ஆசிரியர்கள் கருதியதில்லை. சென்ற நூற்றாண்டில் ஆர். ஜி. பந்தர்க்கார் என்பார் இந்திய வரலாறு ஒன்று எழுதி வெளி யிட்டார். அதில் அவர் தமிழ்நாட்டைப் பற்றியே குறிப்பிட வில்லை. இக் குறைபாட்டை வின்சென்டு ஸ்மித் போன்ற வரலாற்றாசிரியர்கள் எடுத்துக்காட்டியுள்ளார்கள். இந்திய வரலாற்று நூல்களில் தமிழ்நாட்டைப்பற்றிய செய்திகளைக் கூறாமல் புறக்கணித்து வந்ததற்குச் சில காரணங்கள் கூறப் பட்டன. வட இந்தியாவைப்பற்றிய வரலாற்றுக் குறிப்புகள் கி.மு. ஏழாம் நூற்றாண்டிலிருந்தே கிடைத்திருக்கின்றன வென்றும், அதைப்போலத் தென்னிந்தியாவைப் பற்றிய சான்றுகள் ஏதும் கிடைக்கவில்லையாதலால் பொருத்தமான தென்னிந்திய வரலாறு ஒன்று எழுதுவதில் பல இன்னல்கள் உள்ளனவென்றும் வரலாற்றாசிரியர்கள் கூறிவந்தனர். இவர்கள் காட்டும் காரணம் உண்மைக்குப் புறம்பானதாகும். ஒரு நாட்டின் வரலாற்றை எழுதுவதற்கு அந் நாட்டில் எழுந்துள்ள இலக்கியப் படைப்புகள், கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டுகள், புதைபொருள்கள், பழங்காலக் கட்டடச் சிதைவுகள், சிற்பச் சின்னங்கள், சமயக் கோட்பாடுகள் ஆகியவை சான்றுகளாக உதவி வந்துள்ளன. இச் சான்றுகள் அத்தனையும் தமிழகத்திலும் பெருமளவு கிடைத்துள்ளன. இவற்றைக் கொண்டே தமிழ் நாட்டின் வரலாற்றைத் தொடர்ச்சியாகவும் விளக்கமாகவும் எழுதக்கூடும். சென்ற ஐம்பது ஆண்டுகளில் இச் சான்றுகளைக்

கொண்டு எழுதப்பட்ட தமிழக வரலாறுகள் சில வெளிவந்துள்ளன.

இந்தியாவிலேயே மிகப் பெருந்தொகையில் கல்வெட்டுகள் கிடைப்பது தமிழ்நாட்டில்தான். தமிழ்நாட்டில் இதுவரையில் வெளியாகியுள்ள கல்வெட்டுச் செய்திகளைக் கொண்டும், தமிழ் இலக்கியங்களில் காணப்படும் சான்றுகளைக் கொண்டும், பண்டைய கிரீசு, ரோம், எகிப்து, சீனம் ஆகிய நாட்டு வரலாற்று இலக்கியத்தில் தமிழரைப்பற்றிக் கிடைக்கும் சில குறிப்புகளைக் கொண்டும் தமிழக வரலாற்று ஆசிரியர்கள் விளக்கமான வரலாறுகளை இப்போது எழுதி வருகின்றனர். தமிழகத்தில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டுகளில் இதுவரை வெளியிடப்பட்டவை சிலவே. இன்னும் பல்லாயிரம் கல்வெட்டுகள் வெளி வராமல் கல்வெட்டுச் சாசன ஆய்வகத்திலேயே முடங்கிக் கிடக்கின்றன. அவையும் பதிப்பில் வருமாயின் தமிழ் மக்களின் வரலாறு மிகவும் விரிவாக எழுதப்படலாம் என்பதற்கு ஐயம் ஏதுமில்லை.

'விஞ்ஞான முறையில் இந்திய வரலாறு ஒன்றை எழுதப் புகும் ஆசிரியர்கள், கிருஷ்ணா, காவிரி, வைகை ஆற்றங்கரைகளில்தாம் முதன்முதல் தம் ஆராய்ச்சிகளைத் தொடங்க வேண்டுமே அன்றிக் கங்கைக் கரையினின்று.........' என்று பேராசிரியர் சுந்தரம் பிள்ளை எழுதுகின்றார். இந்தியாவில் தோன்றி வளர்ந்து வந்துள்ள பல்வேறுபட்ட நாகரிகங்கள் ஒன்றோடொன்று தொடர்புடையவை. இந்தியாவை வட இந்தியாவென்றும் தென்னிந்தியாவென்றும் பிரித்து, ஒன்றைச் சிறப்பித்து மற்றொன்றைப் புறக்கணித்தல் வரலாற்றைப் பொய்ப்பிக்க முயல்வதாகும். இந்திய வரலாற்றாராய்ச்சியைத் தென்னிந்தியாவில்தான் தொடங்கவேண்டும் என்பது இக்கால வரலாற்றாசிரியர்கள் அனைவருக்கும் உடன்பாடாகும். எனவே, இதுவரை கிடைத்துள்ள பல்வேறு சான்றுகளைக் கொண்டு தமிழகத்தின் வரலாறும், தமிழரின் சால்புகளைப் பற்றிய செய்திகளும் பின்வரும் இயல்களில் தொகுத்தளிக்கப் படுகின்றன.

# 2. தமிழகத்தின் இயற்கை அமைப்புகள்

விந்தியமலைத் தொடரும், சாத்பூராமலைத் தொடரும் ஆழ்ந்த நருமதைப் பள்ளத்தாக்கும், தபதியாறும், தண்ட காரணியக் காடுகளும் வட இந்தியாவென்றும் தென்னிந்தியா வென்றும் இந்தியாவை இரு பகுதிகளாகப் பிரித்து நிற்கின்றன. வடஇந்தியாவில் கைபர், போலன் கணவாய்களின் மூலம் அன்னியரின் படையெடுப்புகள் பல நேர்ந்துள்ளன. அவற்றின் மூலம் அங்கு மக்களின் இனக்கலப்பும், அரசியல் திருப்பங்களும், ஒழுக்கம், மொழி, கலை, பண்பாடு ஆகியவற்றில் மாற்றங்களும் பெருவாரியாக ஏற்பட்டுள்ளன. அவற்றைப் போன்ற பெரு வாரியான மாறுபாடுகள் ஏதும் இன்றித் தமிழ்நாட்டு மக்கள் ஓரளவு அமைதியாகத் தம் வாழ்க்கையை நடத்திச் சென்றார்கள். நெடுங்காலம் அவர்களுடைய சால்புகளும், சமூக இயல்புகளும் தனித்து நின்று வளர்ந்துவந்தன. அதற்குப் பெருந்துணையாக நின்றது தமிழ்நாட்டின் இயற்கை அமைப்பேயாகும்.

**பழந்தமிழ் நாட்டின் எல்லைகள்:** வடக்கில் தக்காணப் பீட பூமியும், கிழக்கிலும், மேற்கிலும், தெற்கிலும் கடல்களும் பழந் தமிழகத்தின் எல்லைகளாக அமைந்திருந்தன. மேலைக் கடற் கரையையொட்டி ஏறக்குறைய 80 கிலோமீட்டர் தொலைவு வரை மேற்குமலைத்தொடர் அமைந்திருக்கின்றது. சில இடங் களில் இது கடலைவிட்டு 150 கிலோமீட்டர் விலகியும், 8 கிலோ மீட்டர் அளவுக்கு நெருங்கியும் இருப்பதுண்டு. இம் மலைத் தொடரின்மிக உயரமான சிகரம் நீலகிரி மாவட்டத்தில் அமைந் துள்ளது. அதற்குத் 'தொட்ட பெட்டா' (பெரிய மலை) என்று பெயர். அதன் உயரம் 2672 மீட்டர் ஆகும். தெற்கே ஆனைமுடி என்னும் மற்றொரு சிகரம் உள்ளது.

மேற்குமலைத் தொடர் மிகப் பெரியதொரு சுவர்போலக் காட்சியளிக்கின்றது. இதில் கணவாய்கள் மிகவும் குறைவு. கோயமுத்தூருக்கு அண்மையிலுள்ள பாலக்காட்டுக் கணவாயும், திருநெல்வேலி மாவட்டத்தின் எல்லையில் உள்ள ஆரல்வாய் மொழிக் கணவாயும், இம் மாவட்டத்தின் மேற்கில் உள்ள செங்கோட்டைக் கணவாயும் மிகவும் சிறப்பு வாய்ந்தவை.

மேற்கு மலைத்தொடரின் ஆனைமலைகள் சிறப்பானவை. இத் தொடர் முழுவதிலும் காடுகள் அடர்ந்து செழித்து வளர்ந்துள்ளன. விரிந்து ஆழ்ந்த பள்ளத்தாக்குகளும், முகில் தவழும் குவடுகளும், துள்ளி விழும் அருவிகளும் மேற்குமலைத் தொடரை அணி செய்கின்றன. இங்கு வளர்ந்திருக்கும் வளமான காடுகளில் கட்டடங்கள் கட்டப் பயனாகும் உயர்தரமான தேக்கு மரங்களும், நூக்கமரங்களும், கடுக்காய் வேங்கை மரங்களும் செழித்து வளர்கின்றன. இக் காடுகளில் யானைகள் கூட்டங் கூட்டமாக உயிர் வாழ்கின்றன. வேங்கை, புலி, சிறுத்தை, கரடி, காட்டெருமை முதலிய வன விலங்குகளும், மான், கடம்பை முதலியவையும், காட்டுப்பன்றி, முள்ளம்பன்றி போன்ற சிறு விலங்குகளும் ஏராளமாகக் காணப்படுகின்றன.

மேற்குமலைத் தொடரைப் போலக் கிழக்குமலைத் தொடர் அவ்வளவு உயரமும், வனப்பும், வன வளமும் உடையதன்று. அது தொடர்ந்தும் இடைவெளியின்றியும் அமையவில்லை. பல இடங்களில் அது சிதறுண்டு காணப்படுகின்றது. மேற்கு மலைத் தொடரைவிடக் கிழக்குமலைத்தொடர் மிகவும் பழமையானதென்று புவியியலார் கூறுவர். இது ஒரிஸ்ஸா மாநிலத்தில் தொடங்கித் தெற்கு நோக்கிக் காணப்படுகின்றது. சென்னைக்கு வடக்கே சுமார் 320 கிலோமீட்டர் நீளத்துக்கு இது சுமார் எண்பது கிலோமீட்டருக்கு மேல் கடற்கரையை விட்டு விலகிச் செல்லுவதில்லை. சென்னை நகருக்கு மேற்கில் இத்தொடர் தென்மேற்காக ஒதுங்கி நீண்டு நீலகிரி மாவட்டத்தில் மேற்குத் தொடருடன் இணைகின்றது.

மேற்குமலைத் தொடருக்கும் கிழக்குமலைத் தொடருக்கும் இடையிட்ட சமநிலப் பகுதியானது மேற்கு-கிழக்காகச் சரிந்து காணப்படுகின்றது. இக்காரணம்பற்றி மேற்குமலைத் தொடரில் தோன்றும் ஆறுகள் யாவும் மேற்கினின்றும் கிழக்காக ஓடி வங்கக் கடலில் கலக்கின்றன. பாலாறு, செய்யாறு, தென்பெண்ணை, காவிரி, வைகை, தாமிரவருணி ஆகியவை தமிழ்நாட்டு ஆறுகளில் சிறந்தவையாம். மேற்குமலைத் தொடரில் உற்பத்தியாகும் சிற்றாறுகள் பல கேரள நாட்டுக்கு வளமூட்டி அரபிக் கடலில் கலக்கின்றன. பெரியாறும், பாரதப்புழையும் அவற்றுள் சிறந்தவையாம்.

தமிழ்நாட்டில் ஓடும் ஆறுகளில் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தது காவிரியாகும். கங்கையாற்றைப் போலவே இஃதும் நினைப்பார் நெஞ்சில் பெருமிதத்தையும் இன்பக் கிளர்ச்சியையும் தூண்டவல்லது. காவிரியானது கருநாடக மாநிலத்தைச்

சார்ந்த குடகில் உற்பத்தியாகித் தென்கிழக்காக ஓடி வங்கக் கடலில் கலக்கின்றது. வரலாற்றுப் புகழ்வாய்ந்த பல பட்டணங்கள் இவ்வாற்றங்கரைகளின்மேல் அமைந்துள்ளன. கருநாடக மாநிலத்தில் சிவசமுத்திரம் அருவிக்கு அண்மையில் அமைந்துள்ள தலையரங்கமும், மைசூர் நகரத்துக்கு 26 கிலோமீட்டர் தொலைவில் உள்ள சீரங்கப்பட்டணமும், தமிழ்நாட்டில் உள்ள புகழ்பெற்ற திருவரங்கமும் காவிரியாற்றின் இடையில் உள்ள மூன்று அரங்கங்கள். இவை யாவும் வைணவத் திருப்பதிகள். திருச்சிராப்பள்ளிக்கு வடக்கே 15 கிலோமீட்டர் தொலைவில் காவிரியாறானது இரு கிளைகளாகப் பிரிகின்றது. தென் கிளைக்குக் காவிரி என்றும், வட கிளைக்குக் கொள்ளிடம் என்றும் பெயர். இவ்விரு கிளைகளும் சிறிது தொலைவு ஓடி மீண்டும் ஒன்றுகூடுகின்றன. இவற்றின் இடையிட்ட தீவில் திருவரங்கம் அல்லது ஸ்ரீரங்கம் என்று வழங்கப்படும் பகுதியில் வைணவக் கோயிலும், திருவானைக்கா என்று வழங்கப்படும் பகுதியில் சிவன் கோயிலும் அமைந்துள்ளன. காவிரியாறானது கடலில் கலக்குமிடத்தில் பண்டைய காலத்தில் புகழ்பெற்ற நகரமான காவிரிப்பூம்பட்டினம் செழிப்புற்று விளங்கிற்று. இந் நகரத்துக்குப் புகார் என்றும், பூம்புகார் என்றும் பெயர்கள் உண்டு. காவிரியின் புகழாக அமைந்துள்ள பாடல்கள் சங்க இலக்கியத்தில் பல உள்ளன.

சேர்வராயன் மலைகள், கல்ராயன் மலைகள், பச்சை மலை ஆகியவற்றின் சரிவுகளில் துள்ளியோடும் அருவிகள் ஒன்று கூடி வெள்ளாறாகின்றது. இந்த ஆறு கிழக்கு நோக்கி ஓடிச் சிதம்பரத்துக்கு 16 கிலோமீட்டர் வடக்கே பறங்கிப்பேட்டையில் கடலில் கலக்கின்றது. வெள்ளாற்றைப் பலகாலம் சோழநாட்டின் எல்லையாகக் கொண்டிருந்தனர். தொண்டை நாட்டில் ஓடும் பாலாறானது கருநாடக மாநிலத்தில் நந்திதுர்க்கம் என்னும் மலைப்பகுதியில் தோன்றுகின்றது. அது கிழக்காக ஓடி வட ஆர்க்காடு, செங்கற்பட்டு மாவட்டங்களைக் கடந்து சென்று சதுரங்கப்பட்டினத்தினருகில் கடலுடன் கலக்கின்றது. பெரு மழை பெய்தாலன்றி இவ்வாற்றில் வெள்ளம் பெருகுவதில்லை. அக்காரணத்தால் பாலாற்று வெள்ளத்தால் நிரம்ப வேண்டிய ஏரிகள் யாவும் பெரும்பாலும் வறண்டே காணப்படும். ஆற்று மணலில் கால்கள் கோலியும், ஆற்றுப் படுகைகளில் கிணறுகள் தோண்டியும் உழவர்கள் பாசன நீர் இறைத்துக்கொள்ளுவார்கள்.

தென்பெண்ணையாறானது கருநாடக மாநிலத்தில் சென்னராயன்பேட்டை என்னும் இடத்தில் உற்பத்தியாகின்றது.

பிறகு அது தமிழ்நாட்டில் இறங்கிச் சேலம், தென்னார்க்காடு மாவட்டங்களில் ஓடிக் கடலூருக்கு அண்மையில் கடலுடன் கலக்கின்றது. வைகையாறு பழநி மலையில் தோன்றுகின்றது; அது மதுரை மாநகருக்குச் சீரையும் சிறப்பையும் வழங்குகின்றது; மதுரையைக் கடந்து, கிழக்கு நோக்கிப் பாய்ந்து சென்று வங்கக் கடலோடு கலக்கின்றது. இவ் வாற்றிலும் ஆண்டு முழுதும் தண்ணீர் ஓடுவதில்லை. மேற்குமலைத் தொடரில் பொழியும் மழை நீரை அணைகள் கட்டித் திருப்பி வைகையில் செலுத்துகின்றனர். வைகையாறும் பண்டைத் தமிழ் இலக்கியங்களில் புகழையும் பாராட்டையும் பெற்றுள்ளது.

தாமிரவருணியாறு திருநெல்வேலி மாவட்டத்துக்கு நீர் வளத்தை வழங்குகின்றது. தென்மேற்குப் பருவக் காற்றினால் மேற்குமலைத் தொடரின் தென்கோடியில் அடைமழை பெய்யும்; அம் மழைநீர் முழுவதும் தாமிரவருணியில் திரண்டோடி வங்கக் கடலில் கலக்கின்றது. எகிப்து மக்களுக்கு நைல் நதி எவ்வாறு உயிர்நாடியாக விளங்குகின்றதோ அவ்வாறே தென்பாண்டி நாட்டுக்குத் தாமிரவருணி உதவுகின்றது என்பர்.

கன்னியாகுமரி மாவட்டத்தின் தென்கோடியில் பல சிற்றாறுகள் ஓடுகின்றன. அவற்றுள் புகழ்பெற்றது பழையாறு என்பது. பல சிற்றாறுகள் ஒன்றுகூடிப் பழையாறு உருவாகின்றது. அச் சிற்றாறுகளில் ஒன்று மகேந்திரகிரியின் தென்புறம் தோன்றிக் கானாறுகள் பலவற்றுடன் கூடிப் பூதப்பாண்டி, கோட்டாறு, நாகர்கோயில், சுசீந்திரம் ஆகிய ஊர்களை அணைத்துச் சென்று மணக்குடி என்னும் இடத்தில் கடலில் கலக்கின்றது. இவ்வாறு உற்பத்தியாகுமிடத்தில் இதன்மேல் பண்டைய காலத்தில் கட்டப்பெற்ற அணை ஒன்று உள்ளது. இவ் வணைக்குப் 'பாண்டியன் அணை' என்று பெயர் வழங்குகின்றது. இவ்வாற்றை மக்கள் 'பறளியாறு' என்றும் பெயரிட்டழைக்கின்றனர். சிலப்பதிகாரத்தில் குறிக்கப்படும் 'பஃறுளி' யாறும் இப் பறளியாறும் ஓராற்றினையே குறிக்கின்றனவா என்பதைப்பற்றி ஆய்வாளரிடையே கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன.

தமிழகத்து மக்கள் தொன்றுதொட்டு மழையையே நம்பி வாழ்ந்து வந்துள்ளனர்; உழவுத்தொழிலைப் போற்றி வளர்த்து வந்துள்ளனர். அவர்கள் செய்து வந்த ஏனைய தொழில்கள் யாவும் உழவுக்குத் துணைபுரிவனவாகவே அமைந்திருந்தன. மழைத்துளியின்றிப் பசும்புல்லும் தலைகாட்டாது என்பார் திருவள்ளுவர். உயர்ந்த மலைகளும் அடர்ந்த காடுகளும்

நிறைந்த பழந்தமிழ் நாட்டில் வானம் பொய்க்காமல் காலமழை பொழிந்து வந்தது. குறித்த காலத்தில் ஆறுகள் பெருக்கெடுத்து ஏரிகளையும் குளங்களையும் நிரப்பின. அதனால் உழவுத் தொழில் செழித்து உணவுப் பண்டங்கள் குறைவின்றிக் கிடைத்து வந்தன. ஆயினும் சில காலங்களில் பருவமழை பெய்யாது மக்கள் பெரும் துயரத்திற்குள்ளானதுமுண்டு.

தமிழகத்துக்கு மழையை வழங்குவன இரு பருவக் காற்றுகள். ஒன்று தென்மேற்குப் பருவக்காற்று; மற்றென்று வடகிழக்குப் பருவக்காற்று. ஜூன் மாதம் தொடங்கி அக்டோபர் மாதம் வரையில் தென்மேற்குப் பருவக்காற்று வீசுகின்றது. இது இந்து மாக்கடலையும், அரபிக் கடலையும் கடந்து வந்து மேற்கு மலைத்தொடரின் மேற்புறத்தைத் தாக்குகின்றது. அதனால் அங்கெல்லாம் பெருமழை பெய்கின்றது. அதனால் கேரள நாட்டுக்குக் குறைவின்றி நீர்வளம் சுரக்கின்றது. கேரளத்தில் ஓராண்டில் சராசரி 200 சென்டிமீட்டர் மழை பெய்கின்றது. தென்மேற்குப் பருவக் காற்றானது உயரமான மேற்கு மலைத் தொடரைக் கடந்து வீசுவதில்லை. இதனால் தமிழ்நாட்டுக்குப் போதிய நீர்வளம் கிடைப்பதில்லை. எனினும், இக் காற்றுப் பாலக்காட்டுக் கணவாயின் வழியே நுழைந்து வந்து சவவாது மலைகளின்மேலும், சேர்வராயன்மலைகளின் மேலும் மோதி அவ்வப் பகுதிகளில் சிறிதளவு மழை பயக்கின்றது. இவையே யன்றி வேறு சில இடங்களும் இக் காற்றினால் மழைவளம் பெறுவதுண்டு. பட்டுக்கோட்டை, தஞ்சாவூர், திண்டுக்கல், மதுரை, பொள்ளாச்சி, கோயமுத்தூர், தென்காசி, கன்னியா குமரி ஆகியவை அத்தகைய இடங்களுள் சில. ஆகஸ்டு மாதத்தின் இடையில் காவிரியாற்றோரப் பகுதிகளிலும், காவிரியின் கழி முகத்திலும், தென்மேற்குப் பருவக்காற்றினால் நல்ல மழை பெய் வதுண்டு. ஆகஸ்டின் பிற்பகுதியிலும், செப்டம்பர் முழுவதிலும் காஞ்சிபுரத்துக்கும் திருப்பத்தூர் (இராமநாதபுரம்) நகரத் துக்கும் இடையிட்ட கடலோர மாவட்டங்களிலும், மரக்காணம், ஆம்பூர், வாணியம்பாடி ஆகிய இடங்களிலும் இப் பருவக் காற்று மழையைக் கொடுப்பதுண்டு. நாமக்கல், கரூர், ஈரோடு, திருச்சிராப்பள்ளி ஆகிய உள்நாட்டு ஊர்களில் அக்டோபர் மாதத்தில்தான் மழையை எதிர்பார்க்கலாம். அச் சமயம் தென் மேற்குப் பருவக்காற்று ஓய்வுற்று வடகிழக்குப் பருவக்காற் றானது தொடங்குகின்றது. இக்காற்று அக்டோபர் மாதத்தில் தொடங்கி டிசம்பர் மாதம் வரையில் வீசும். தென்மேற்குப் பருவக்காற்றைப்போல இக் காற்றினால் அடைமழை பெய்வ தில்லை. எனவே, மேற்குமலைத் தொடரின் கிழ்ப்புறம்,

சமவெளிப் பகுதிகளில் கிடைக்கக் கூடிய மழைவளம் மிகவும் குறைவுதான் ; ஓராண்டில் சராசரி 100, 125 சென்டிமீட்டருக்கு மேல் இராது. பொதுவாகத் தமிழ்நாட்டில் ஐப்பசி (அக்டோபர்-நவம்பர்) மாதம் முழுவதிலும் நல்ல மழை பெய்வதுண்டு. வடகிழக்குப் பருவக் காற்று கார்த்திகை மாதத்தில் மெலிவுற்றுச் சிறிதளவு மழையையே கொடுக்கின்றது. பிறகு அறவே ஓய்ந்து விடுகின்றது.

வடகிழக்குப் பருவக்காற்றும் சிற்சில ஆண்டுகளில் ஒழுங்காக வீசுவதில்லை. வானம் பொய்க்கும்போது நாட்டில் வறட்சி ஏற்படும். வறட்சி காலங்களில் மக்கள் கிணறு, கயம், ஊற்றுக் கால்கள் ஆகிய நீர்நிலைகளை நாடுவார்கள். சில சமயம் வடகிழக்குப் பருவக்காற்றினால் அளவுக்கு மீறிய மழையும் பெய்வதுண்டு; புயலும் வீசும். வங்கக் கடலில் அவ்வப்போது காற்று மண்டலங்களில் அழுத்தம் ஏற்படுவதுண்டு. அப்போதெல்லாம் புயற்காற்று ஒன்று உருவாகி, நாட்டுக்குள் நுழைந்து கடற்கரை வட்டங்களில் பெருமழையைக் கொடுக்கும், புயலாலும் வெள்ளத்தாலும் உயிருக்கும் உடைமைக்கும் சேதம் விளையும் ; உழவுத் தொழிலுக்கும் ஊறு நேரும். இக் காரணத்தால் பெருமழையை அடுத்தும் நாட்டில் பஞ்சம் நேரிடுவதுண்டு. பொதுவாகத் தென்னிந்தியாவில் கோடையிலோ, கார்காலத்திலோ மிதமிஞ்சிய தட்பவெட்ப வேறுபாடு ஏற்படுவதில்லை.

மக்களின் வாழ்க்கைக் கூறுகளை மாற்றியமைக்கக்கூடிய இயல்பு பெருமழைக்கும், வறட்சிக்கும், குளிருக்கும், வெயிலுக்கும் உண்டு.

இக் காலத்தில் விஞ்ஞானத்தின் துணைகொண்டு இயற்கையால் விளையும் இன்னல்களும், இடர்ப்பாடுகளும் வாழ்க்கைக்கு ஊறு விளைக்காமல் ஓரளவு பாதுகாத்துக் கொள்ளக்கூடும். ஆற்றின்மேல் அணையிட்டு ஏரிகளையும் குளங்களையும் நிரப்பிக் கொள்ளுகின்றோம் ; பெரிய பெரிய நீர்த்தேக்கங்களையும் அமைத்துக் கொள்ளுகின்றோம்; வறட்சி ஏற்படும்போது கிணறுகள் தோண்டி மின்இயந்திரங்களைக்கொண்டு நீர் இறைத்துக் கொள்ளுகின்றோம். ஆனால், பழங்காலத்தில் இயற்கையாற்றலின் வெறியாட்டங்களுக்கு அஞ்சிச் செயலற்று நின்றனர். 'வருவது வழியில் நில்லாது' என்று எண்ணி நன்மையையும் தீமையையும் வந்தது வந்தவாறே ஏற்றுக்கொண்டனர். காற்றும், மழையும், தட்பவெப்பங்களும் மக்கள் வாழ்க்கை இயல்புகளை மாற்றக் கூடியவை என்பது விஞ்ஞானங் கண்ட உண்மை. அவ்வாறே மக்களின் இயல்பு அவர்கள் வாழும் இடங்

கட்கு ஏற்ப அமைகின்றது என்பதும் உண்மை. அரிஸ்டாட்டில், கோபினோ, போடின், மாண்டஸ்கியூ ஆகிய அறிஞர்கள் இவ்வுண்மையில் பெருநம்பிக்கை கொண்டிருந்தனர். இதற்குச் சார்பாகப் பல சான்றுகள் உலக வரலாற்றிலும் காணக் கிடக்கின்றன.

குன்றுகளிலும் காடுகளிலும் கடலோரங்களிலும் வாழும் மக்கள் உழுது பயிரிட்டு நாடு நகரங்களை அமைத்து வாழும் மக்களைவிட நாகரிகத்தில் தாழ்ந்தவராகவே காணப்படுகின்றனர். வாழ்க்கை வசதிகளைப் பெருக்கிக் கொள்ளவும், கலைகளை வளர்த்துக் கொள்ளவும், அயலாருடன் தொடர்பு கொள்ளவும், ஆற்றோர வெளிகளில் வாழ்ந்துவந்த உழவர்களுக்கே வாய்ப்புகள் மலிந்திருந்தன என்ற உண்மையை வரலாற்றுச் சான்றுகள் பல விளக்குகின்றன. உழவுத்தொழிலே நாகரிகத்தின் உயர்ந்த சின்னமாகக் கருதப்பட்டது. 'சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்' [1] என்றும், 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்; மற்றெல்லாம் தொழுதுண்டு பின்செல் பவர்' [2] என்றும் உழவைப் பாராட்டிப் புகழ்ந்தது பழந்தமிழரின் பண்பாடாகும். பழந்தமிழகத்தில் காவிரிப்பூம்பட்டினம், மதுரை, வஞ்சி முதலிய நகரங்கள் யாவும் ஆற்றோரங்களிலேயே அமைந்து வளர்ந்து வந்திருக்கின்றன. உழவுத்தொழிலுக்கும் நாகரிக வளர்ச்சிக்கும் ஏற்பட்டிருந்த நெருங்கிய தொடர்புக்கு இஃதோர் சிறந்த சான்றாகும்.

சமவெளிகளும், காடும், மலையும், கடலும் மக்களுக்கு உணவுப்பண்டங்களையும் அவர்கட்கு வேண்டிய ஏனைய வாழ்க்கை வசதிகளையும் வழங்கின. ஆற்றோரங்களிலும் உள்நாட்டு நன்செய் நிலங்களிலும் நெல்லும் கரும்பும் பயிராயின. புன்செய்ப் பயிர்களான கேழ்வரகு, கம்பு, தினை, சாமை, வரகு, சோளம், துவரை, மொச்சை ஆகியவை சமவெளிகளிலும் மலையிலும் காட்டிலும் விளைந்தன. பயறு வகைகளும், பருத்தியும் எந்த வகையான நிலத்திலும் பயிராகக் கூடியன. மயிற்பீலி, யானைத் தந்தம், கட்டடமரம், கடுக்காய், நெல்லிக்காய் போன்ற மருத்துவச் சரக்குகள் காடுபடு பொருள்கள்.

பண்டைக் காலத்தில் மத்தியதரைக் கடல் நாடுகளுக்கும் சீனாவுக்குமிடையே கடல் வாணிகம் நடைபெற்று வந்தது.

1. குறள், 1031.
2. குறள், 1033.

வாணிகச் சரக்குகளை ஏற்றிக்கொண்டு வந்த மரக்கலங்கள் தமிழகத்தைச் சுற்றிக்கொண்டுதான் ஊர்ந்து செல்லவேண்டும். ஆகவே, இவ் வாணிகத்தில் தமிழகத்துக்கும் தொடர்பு ஏற்பட்டது. தமிழகத்தின் கீழைக் கடற்கரையிலும் அரபிக் கடல் ஓரத்திலும் பல துறைமுகங்கள் அமைந்திருந்தன. கேரளத்தின் கரையோரங்களில் கடல்நீர் உட்புகுந்து விரிவாகத் தேங்கியிருப்பதைக் காணலாம். இத் தேக்கங்களுக்குக் காயல்கள் என்று பெயர். அந்நிய நாட்டுக் கப்பல்கள் வந்து தங்குவதற்கு இத் துறைமுகங்களும் காயல்களும் மிகவும் வசதியாக இருந்தன. இத் துறைமுகங்கள் யாவும் சிறியவை யாகையால் இங்குச் சிறு சிறு மரக்கலங்களே நங்கூரம் பாய்ச்சலாம். சென்ற மூவாயிரம் ஆண்டுகளில் கடற்கரையோர அமைப்பில் பல புவியியல் மாறு பாடுகள் ஏற்பட்டுள்ளன. புகழ்பெற்ற பண்டைய துறைமுகங்கள் சில பிற்காலத்தில் அழிந்துபோயின; சில தம் சிறப்பில் குன்றி விட்டன. பண்டைய துறைமுகங்களான காயலும் கொற்கையும் இப்போது மணல்மேடிட்டுக் கிடக்கின்றன; கடல் விலகிச் சென்றுவிட்டது. பூம்புகார் கடலில் மூழ்கிவிட்டது. மாபெரும் நகரம் செழித்தோங்கி இருந்த அந்த இடத்தில் இப்போது மீனவர்கள் குப்பங்களே எஞ்சியுள்ளன. தமிழக அரசு இதைச் சிறப்பாகப் புதுப்பிக்க நடவடிக்கை எடுத்துள்ளது. பல்லவர் காலந் தொடங்கிப் பல நூற்றாண்டுகள்வரை மாமல்லபுரம் மிகப்பெரிய துறைமுகமாக விளங்கி வந்தது. பிறகு அது பொலி விழந்து அழிந்து போயிற்று. கேரளக் கடற்கரையில் நீண்ட காலம் வாணிகக் கப்பல்கள் வந்து தங்குவதற்கு இசைவாக இலங்கிய வைக்கரையும், முசிறியும், தொண்டியும் பிற்பட்டு அழிந்து மறைந்துவிட்டன.

இலங்கைத் தீவு, மாலத் தீவுகள், இப்போது பர்மா, மலேசியா, இந்தோனேசியா என்னும் பெயரில் வழங்கும் நாடுகள், சீயம் (தற்காலத் தாய்லாந்து), காம்போசம், சீனம் ஆகிய நாடுகளுடன் தமிழகம் மிக நெருங்கிய வாணிகத் தொடர்பும் வரலாற்றுத் தொடர்பும் கொண்டிருந்தது.

தமிழகத்தில் எல்லைகள் அவ்வப்போது மாறுபட்டு வந் துள்ளன. ஆதிகாலத்தில், அதாவது தலைச்சங்க காலத்தில், தமிழகம் தென்கடலுக்கப்பாலும், தொலை தூரம் பரவி இருந்தது என்று கூறும் சில குறிப்புகள் பண்டைய தமிழ் இலக் கியங்களில் காணப்படுகின்றன. அப்படிப் பரவியிருந்த நிலப்பகுதி மட்டும் நாற்பத்தொன்பது நாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்த தாம். 'இறையனார் அகப்பொருள்' என்னும் தமிழ் இலக்கண

நூலின் உரையாசிரியர் இப்பெயர்களைத் தம் உரையில் கொடுத்துள்ளார்.[3] இப்போது வழக்கில் உள்ள தமிழ் இலக்கணங்களில் மிகவும் பழமையானதாகக் கருதப்படுவது தொல்காப்பியமாகும். மொழிக்கும் மக்கள் வாழ்க்கைக்கும் ஓர் இலக்கணத்தை, அதாவது 'கையாளும் அழகை அல்லது நெறியை' வகுப்பது இந் நூல். இதற்குச் சிறப்புப் பாயிரம் வழங்கியவர் பனம்பாரனார் என்பார். இவர் தொல்காப்பியருடன் ஒரே பள்ளியில் மாணவராகப் பயின்றவர் என்பர். இவருடைய சிறப்புப் பாயிரத்தில் தமிழ்நாட்டின் எல்லைகள் குறிக்கப்பட்டுள்ளன. 'வடவேங்கடம் தென்குமரி யாயிடைத் தமிழ்கூறு நல்லுலகம்'[4] என்று இவர் தமிழகத்தின் எல்லையை விளக்குகின்றார். தமிழகத்தின் கிழக்கிலும் மேற்கிலும் கடல் சூழ்ந்துள்ளது. எனவே, இவ்விரு திசைகளிலும் நாட்டின் எல்லையைப் பனம்பாரனார் எடுத்துக் கூறவில்லை. ஆனால், வடஎல்லையையும் தென்னெல்லையையும் மட்டும் அவர் கூறுவதில் பொருள் உண்டு. 'கடல் கொள்வதன் முன்பு பிறநாடும் உண்மையின், தெற்கும் எல்லை கூறப்பட்டது. கிழக்கும் மேற்கும் பிறநாடு இன்மையின் கூறப் படாவாயின' என்று இளம்பூரணர் விளக்கம் தருகின்றார். தொல்காப்பியத்தின் உரையாசிரியர்களுள் இவரும் ஒருவர். பிற மொழி வழங்கும் நிலப் பகுதியிலிருந்து தமிழ் வழங்கும் நிலத்தினைப் பிரித்து உணர்த்துதற்பொருட்டே 'வடவேங்கடம் தென்குமரி' என்று பனம்பாரனார் பாயிரம் வகுத்தார் என்பது இளம்பூரணரின் கொள்கை. ஒரு நாட்டுக்கு அகப்பாட்டு எல்லை என்றும் புறப்பாட்டு எல்லை என்றும் இருவேறு எல்லைகள் உண்டு. அகப்பாட்டு எல்லை நாட்டின் வரம்புக்கு உட்பட்டதாகும். புறப்பாட்டு எல்லை அவ் வரம்புக்கு அப்பாற்பட்டதாகும். பனம்பாரனார் கூறும் எல்லைகளான வேங்கடமும் தென்குமரியாறும் அகப்பாட்டெல்லைகள் என்பது இளம்பூரணரின் கருத்து. ஆகவே, வேங்கடத்துக்கு வடக்கும், குமரிக்குத் தெற்கும் சில நிலப்பகுதிகள் அமைந்திருந்தன எனக் கருதவும் இடமேற்படுகின்றது. குமரியாற்றுக்குப் புறம்பாய் விரிந்து கிடந்த தென்னிலப் பகுதிக்குக் குறும்பனை நாடு என்று பெயருண்டு என்றும், செந்தமிழல்லாத திரிந்த தமிழ் அங்கு வழங்கி வந்ததால் குறும்பனை நாட்டைப் பனம்பாரனார் தமிழ்நாட்டு எல்லைக்குப் புறம்பாக ஒதுக்கினார் என்றும், 'கடல் கொள்ளப்படுவதன் முன்பு பிற நாடும் உண்மையின், தெற்கும் எல்லை கூறப்பட்டது' என்றும் இவ்வுரையாசிரியர்

3. இறையனார் அகப்பொருள் பாயிரம் உரை.

4. தொல், சிறப்புப் பாயிரம்.

கருதுவர். இந்தப் 'பிற நாட்டில்' 'பஃறுளியாறு' என்ற ஓர் ஆறும், குமரிக்கோடு என்ற 'பன்மலையடுக்கத்து' மலைத்தொடர் ஒன்றும் இருந்தனவென்றும், அக் காலத்திற்றான் தொல் காப்பியர் வாழ்ந்திருந்தார் என்றும், அவர் காலத்துக்குப் பின்பு இக் காலத்திய குமரிமுனை வரையில் தென்னிலப் பகுதி கடலில் மூழ்கிப் போயிற்று என்றும், இக் காரணத்தினால் காலத்தால் தொல்காப்பியருக்குப் பிற்பட்டவரான இளங்கோவடிகள் தாம் பாடிய சிலப்பதிகாரத்தில், 'நெடியோன் குன்றமும் தொடியோள் பவ்வமும், தமிழ் வரம்புறுத்த தண்புனல் நல்நாட்டு' என்று கடலைத் தமிழகத்துக்குத் தென் எல்லையாக வகுத்தார் என்றும் கொள்ள வேண்டும். பஃறுளியாறு என்பது குமரியாற்றுக்குத் தென்புறத்தில் பன்மலை யடுக்கத்தில் ஓடிற்று. முதன்முதல் கடல்கோளுக்கு உட்பட்டது பஃறுளியாறுதான். பிறகுதான் குமரிமலைத் தொடர் கடலில் மூழ்கி மறைந்து போயிற்று. இளம்பூரணர், இறையனார் அகப்பொருளின் உரையாசிரியர், அடியார்க்கு நல்லார் ஆகியோர் அனைவரும் குமரிமுனைக்குத் தெற்கிலும் தமிழகம் நெடுந்தொலைவு பரவி இருந்தது என்று கருதினர். இவர்கள் கூற்றைப் புனைந்துரை என்றோ, பிற நாடுகளையும் பிற மொழிகளையும் தாழ்த்தித் தமிழ் நாட்டையும் தமிழ்மொழியையும் உயர்த்திப் புகழ் தேடினர் என்றோ கொள்வதற்கில்லை. சான்றோர் மொழிகளைக் கொண்டும், தத்தம் காலத்தில் மக்கள் சமுதாயத்தில் நிலவி வந்த பழங்காலச் செய்திகளைக் கொண்டும் தம் ஊகத்தைக் கொண்டும் இவர்கள் இம் முடிவுக்கு வந்துள்ளனர் என்பதில் ஐயமில்லை. நமக்குக் கண்கூடான காரணங்கள் ஏதும் தோன்ற வில்லையாயினும் பல காலமாக நிலவி வரும் பழங்கொள்கை களைப் புறக்கணித்தல் அறிவுடைமையன்று.

வரலாற்றுக் காலத்திலேயே தென்னிந்தியாவின் கிழக்கிலும் மேற்கிலும் பல கடல்கோள்கள் நிகழ்ந்துள்ளன. அவற்றால் தமிழகத்துத் துறைமுகப் பட்டினங்கள் பல நீரில் மூழ்கிவிட்டன. குமரிமுனைக்குத் தென்பாலும் நிலப்பகுதி இருந்ததாகவும் அதைக் கடல் கொண்டு போயிற்றென்றும் புவியியலார் கருதுகின் றனர். ஆனால் அந்நிலப்பகுதி எவ்வளவு தூரம் பரவியிருந்தது என்று அறுதியிட்டு அறிய முடியவில்லை. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலும் பல கடல்கோள்கள் நிகழ்ந்திருக்கக்கூடும். கடல் கொண்டு போன அத் தென்னிலப் பகுதிக்குக் 'குமரிக்கண்டம்' என்றொரு பெயருண்டு. குமரிக்கண்டத்தைப்பற்றிய குறிப்புகள் தமிழ் இலக்கியங்களிலும் உரைகளிலும் ஆங்காங்கு அகச் சான்றுகளாக விரவிக் காணப்படுகின்றன. பாண்டியன் ஒருவன்

'பஃறுளியாற்றுடன் பன்மலையடுக்கத்துக் குமரிக்கோடும் கொடுங் கடல் கொள்ள, வடதிசைக் கங்கையும் இமயமும் கொண்டு தென்திசை யாண்ட'தாகச் சிலப்பதிகாரம் கூறு கின்றது.[5] அதாவது இப் பாண்டியனின் நாடு குமரிமுனைக்குத் தெற்கே நெடுந்தொலைவு பரவியிருந்ததாம். அந் நாட்டில் பஃறுளியாற்றையும் பன்மலையடுக்கத்துக் குமரிக்கோட்டையும் கடல்கொண்டு போயிற்று. இக் காரணத்தால் தன் நாட்டின் பரப்பானது சுருங்கி விட்டதைக் கண்டான் பாண்டிய மன்னன். தென்பால் கடல் மண்டிவிட்டதால் அவன் வடபால் தன் நோக்கத்தைச் செலுத்தினான். வடக்கில் படை செலுத்திச் சென்று இழப்புக்குள்ளான பஃறுளியாற்றுக்கு ஈடாகக் கங்கையையும், குமரிக்கோட்டுக்கு ஈடாக இமயத்தையும் கைக் கொண்டான். இச் செய்தியைப்பற்றிய குறிப்பு ஒன்று முல்லைக் கலியிலும் காணப்படுகின்றது. 'மலிதிரை ஊர்ந்துதன் மண்கடல் வௌவலின், மெலிவின்றி மேற்சென்று மேவார் நாடு இடம் படப் புலியொடு வில்நீக்கிப் புகழ்பொறித்த கிளர்கெண்டை வலியினான் வணக்கிய வாடாச்சீர்த் தென்னவன்' என்று ஆசிரியர் சோழன் நல்லுருத்திரனார் கூறுகின்றார்.[6] நக்கீரர், அடியார்க்கு நல்லார் ஆகிய உரையாசிரியர் காலத்திலும், நல் லுருத்திரனார் காலத்திலும் தொல்காப்பியனாருக்கு முன்பு ஒன்றும் பின்பு ஒன்றுமாக இரண்டு கடல்கோள் நிகழ்ந்த செய்தியும், அவற்றால் தமிழகத்துக்குப் பேரிழப்பு நேரிட்ட செய்தியும் பரவலாக வழங்கி வந்திருக்கவேண்டும்.

கடல்கோள்களுக்குட்பட்டு மூழ்கிப்போன நிலப்பகுதிக்கு 'லெமூரியாக் கண்டம்' என்று பெயரளிக்கப்பட்டது. சர் வால்டர் ராலே, பேராசிரியர் ஹெக்கல், சர் ஜான் ஈவான்ஸ், ஸ்காட் எலியட், சர் ஜே. டபிள்யூ. ஹோல்டர்னஸ் ஆகிய ஆய்வாளர்கள் இந் நிலப்பகுதி ஒன்று பண்டைய காலத்தில் இருந்ததென்று ஒப்புக்கொண்டுள்ளனர். அஃதுடன், இங்குதான் மக்களினமே முதன்முதல் உலகின்மேல் தோன்றிற்று என்றும் கூறி 'லெமூரியக் கொள்கை'யை உருவாக்கினர்.

கன்னியாகுமரிக்குத் தெற்கிலும் கிழக்கிலும் பெரிய நிலப் பகுதி ஒன்று பரந்து கிடந்தது என்பதற்கும், பிற்பாடு அது பகுதி பகுதியாகப் பல கடல்கோள்களினால் மூழ்கிப்போயிற்று என்ப தற்கும் அகச் சான்றுகளும் புறச் சான்றுகளும் உள்ளன. ஆனால்,

5. சிலப்: 11: 19 - 23.
6. முல்லைக்கலி : 4 : 1 - 4.

அஃது எவ்வளவு தொலைவு பரவி இருந்தது. இறுதியாக எப்போது மறைந்து போயிற்று என்பது இன்னும் புவியியல் புதிர்களில் ஒன்றாகவே உள்ளது.

சங்க காலத்துக்கு முன்பு கன்னியாகுமரிக்குத் தெற்கிலும் பரவியிருந்த தமிழகம் சங்க காலத்தில் 'வடவேங்கடம் தென் குமரி ஆயிடைத் தமிழ்கூறு நல்உலக'மாகச் சுருங்கிவிட்டது. 'தென்குமரி வடபெருங்கல் குணகுட கடலா வெல்லை'[7] என்றும், 'தென்குமரி வடபெருங்கல் குணகுட கடலா எல்லை'[8] என்றும், சங்க நூல்கள் தமிழகத்தின் எல்லையை வகுத்துக் காட்டியுள்ளன. வேங்கடத்துக்கு வடக்கில் வேற்றுமொழி (தெலுங்கு) வழங்கி வந்தது.[9] வேங்கடத்துக்குத் தென்பால் 'தேன் தூங்கு உயர்வரை நன்னாடு' ஒன்றைப் 'புல்லி' என்ற மன்னன் ஆண்டு வந்தான்.[10] கட்டி என்ற குறுநில மன்னனின் நாட்டுக்கு வடக்கிலும் வடுகர் வாழ்ந்து வந்தனர்.[11] பண்டைய தமிழகத்தில் இப்போதைய கேரளமும் சேர்ந்திருந்தது. ஆனால், நன்னூல் என்னும் தமிழ் இலக்கணமானது 'குணகடல் குமரி குடகம் வேங்கடம் எனுநான் கெல்லையின்'[12] என்று தமிழகத்துக்கு எல்லை வகுக்கின்றது. இவ்விலக்கண நூல் எழுந்தது 12ஆம் நூற்றாண்டில்; ஆகையால், இந் நூலாசிரியரான பவணந்தி முனிவர் காலத்தில் தமிழகத்தின் மேலையெல்லை குடகு வரையில் சுருங்கிவிட்டது எனத் தெரிகின்றது. தமிழகத்தினின்றும் பிரிந்து நின்ற சேரநாட்டில் தமிழ்மொழியானது உருத் திரிந்து கொடுந்தமிழாக மாறிற்று.

யாழ்ப்பாணம் என்று வழங்கும் வட இலங்கை தமிழகத்துடன் சேர்ந்திருந்ததா என்று உறுதியாகக் கூறுவதற்கில்லை. எனினும், யாழ்ப்பாணத்திலும் தமிழகத்திலும் வழங்கிய மொழியும், பண்பாடும் திரிபின்றி ஒரேவிதமாக இருந்துவந்தன என்று கருதவேண்டியுள்ளது. ஈழத்துப் பூதன்தேவனார் என்பவர் யாழ்ப்பாணத்தைச் சார்ந்தவர் என்று அவருடைய பெயரே அறிவிக்கின்றது. அவர் பாடிய பாடல்கள் அகநானூற்றிலும்,[13] குறுந்தொகையிலும்,[14] நற்றிணையிலும்[15] சேர்க்கப் பட்டுள்ளன.

7. புறம்-17: 1-2. 8. மதுரைக்: 70-71.9 அகம். 211:7-8. 10. அகம். 393: 18-20. 11. குறுந்-11: 5-6.

12. நன். சிறப். பாயி.

13. அகம்.88, 231, 307. 14. குறுந். 189, 343, 360. 15. நற்றி-366.

தமிழகம் பன்னூறு ஆண்டுகள் பாண்டி நாடு, சோழ நாடு, சேர நாடு, கொங்கு நாடு முதலிய அரசியற் பிரிவுகளுக்குட் பட்டுக் கிடந்ததற்கு அதன் இயற்கையமைப்புதான் காரணம் என்பது தெளிவு. மேற்குத் தொடர் மலைகளும், கிழக்குத் தொடர் மலைகளும் இரு கடற்கரையோரங்களிலும் அமைந்து தமிழகத்தின் நீலகிரி மாவட்டத்தில் ஒன்றாய் இணைகின்றன. இவ்விரு தொடர்கட்குமிடையே சமவெளி ஒன்று அமைந் துள்ளது; மேற்குத் தொடருக்கு மேற்கிலும் கிழக்குத் தொட ருக்குக் கீழ்ப்புறத்திலும் சமவெளிகள் உள்ளன. நீலகிரிக்குத் தெற்கிலும் சமவெளிகள் உள்ளன. இவையேயன்றிப் பல குன்று களையடுத்தும் சமவெளிகள் அமைந்துள்ளன. இச் சமவெளி களில் வாழ்ந்த மக்கள் ஆங்காங்குத் தனித்தனி நாட்டு மக்க ளாகவே வாழ்ந்து வந்தனர். மிகப் பெரிய நாடுகளான பாண்டி நாடு, சோழ நாடு, சேர நாடு, கொங்கு நாடு, தொண்டை நாடு ஆகிய நாடுகள் இவ்வாறு அமைந்தவையே. இவையே யன்றி அதியமான்களும், ஆய்களும், மலையமான்களும், வேளிர் களும் ஆண்டுவந்த குறுநாடுகள் பலவும் தனியரசுகளாகவே இயங்கிவந்தன. காட்டு நாடு,[16] பாரி நாடு,[17] கோனாடு,[18] முக்காவல் நாடு,[19] வேங்கட நாடு[20] முதலிய நாடுகளும் புற நானூற்றில் குறிப்பிடப்படுகின்றன. பழந்தமிழர் ஒன்றுபட்டு வாழாமல் தனித்தனி அரசியற் சமூகங்களாகப் பிரிந்து வாழ்ந்து வந்ததற்கு நாட்டின் இயற்கை அமைப்பே காரணம் என்றால் மிகையாகாது. அவ்வப்போது ஒரு கரிகாலனோ, நெடுஞ் செழியனோ, அன்றி இராசராசனோ, இராசேந்திரனோ தோன்றி அண்டை அயல்நாடுகளை வென்று தனியரசு செலுத்தி வந்துள்ளனர்; தமிழகத்திலும் ஒருமைப்பாடு காணப்பட்டது. ஆனால், பொதுவாக மக்கள் தமக்குள்ளேயே பொருமலிலும் பூசலிலும் ஈடுபட்டு, ஒற்றுமை குலைந்து அயலாருக்கு இடங் கொடுக்க வேண்டிய நிலைமை அடிக்கடி ஏற்பட்டுள்ளது. மலை களும் குன்றுகளும் நாட்டில் பல இடங்களில் குறுக்கிட்டதால் சங்க காலத்திலும் அதற்கு முன்பும் மருதம், முல்லை, குறிஞ்சி, நெய்தல், பாலை என்று நிலப் பாகுபாடுகள் ஏற்பட்டு அவற்றிற் கேற்ப மக்களின் ஒழுக்கமும், பண்பாடுகளும், வாழ்க்கை முறை களும் அமையலாயின.

16. புறம்-150. 17, புறம்-122. 18. புறம்-61. 19. புறம்-80.
20. புறம்-389.

# 3. வரலாற்றுக் காலத்துக்கு முந்திய தமிழகம்

உலகில் முதன்முதல் மக்களினம் தோன்றியது தென்னிந்தியா விற்றான் என்று சில புவியியல், மானிடவியல் வல்லுநர் கருது கின்றனர். இவர்களுடைய கருத்துக்குச் சார்பாகப் போதிய சான்றுகள் இன்னும் கிடைத்தில. எனினும், இந்தியத் துணைக் கண்டத்தைப் பற்றியவரையில் தென்னிந்தியாவிற்றான் முதன் முதல் மக்களினம் தோன்றிற்று என்பதில் ஐயமேதுமில்லை.

பலகோடி யாண்டுகட்கு முன்னர் உண்டான மிகப் பழைய கற்பாறைப் படிவுகள் தென்னிந்தியாவிற்றான் காணப்படு கின்றன. இப் பகுதியில் காடுகளும் மலைகளும் செறிந்து கிடக் கின்றன. எனவே, பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே இங்கும் மக்கள் தோன்றி வாழ்வதற்கு நல்வாய்ப்புகள் உண்டு. தொலை தூரம் தேடியலையாமலேயே அவர்கள் இங்குத் தமக்கு வேண்டிய உணவைப் பெறலாம். இக் காடுகளில் காய்களும், கனிகளும், கொட்டைகளும், கிழங்குகளும் கிடைத்தன. ஆதிமனிதன் ஆங்காங்குக் கிடைத்த உணவுப் பண்டங்களைப் பொறுக்கித் தின்று வயிறு பிழைத்தான். பிறகுதான் அவன் வேட்டையாடக் கற்றுக்கொண்டான். எனவே, மனிதன் வேட்டையாடிப் பிழைக்கக் கற்றுக்கொண்ட ஒரு காலத்துக்கும் முற்பட்ட காலத்தில் ஆதி மனிதன் தென்னிந்தியாவில் தோன்றி வாழ்க்கையை நடத்திவந்தான் என்று கொள்ளலாம்.

விந்தியமலைத் தொடருக்கு வடக்கே பரந்து கிடக்கும் கங்கையாற்று வெளியும், இமயமலைத் தொடரும் முன்னொரு காலத்தில் கடலுக்குள் மூழ்கிக் கிடந்தன. இமயமலைத் தொடரில் ஆங்காங்குக் கடல்வாழ் உயிர்களின் எலும்புகள் காணப்படுவதே இதற்குப் போதிய சான்றாகும். வட இந்தியா கடலுக்குள் மூழ்கிக் கிடந்த அக் காலத்தில் தென்னிந்தியா வானது காடும் மலையும் செறிந்து, மக்களினமும் ஏனைய உயிர் வகைகளும் வாழ்வதற்கு ஏற்ற இடமாக விளங்கிற்று என்பதனை இதனால் அறிகின்றோம். கங்கைவெளியும் இமயமும் கடலி

னின்றும் மேலெறியப்பெற்ற புவியியல் நிகழ்ச்சி இற்றைக்கு ஐந்து கோடி யாண்டுகட்கு முன்னர் நடைபெற்றிருக்கவேண்டும் என்று புவியியலார் கருதுவர்.

தென்னிந்தியாவுக்குத் தெற்கில் அமைந்திருந்த லெமூரியா விற்றான் முதன்முதல் மக்களினம் தோன்றிற்று எனவும், அவ் வினமே தமிழ்நாட்டின் ஆதிகுடிகள் எனவும் லெமூரியக் கொள்கையினர் கருதுவர். லெமூரியக் கண்டத்தில் வாழ்ந்து வந்த மக்களின் வழிவந்தவர்கள் இப்போது தென்னிந்தியா விலும், இலங்கையிலும், கிழக்கிந்தியத் தீவுகளிலும் வாழ்ந்து வருகின்றார்கள். இவர்களிடம் இனவொற்றுமை, மக்கள் உடல்கூறு ஒற்றுமை, மொழி அமைப்பு ஒற்றுமை ஆகியவை பல காணப்படுகின்றன. நியூஜிலாந்தில் வாழும் ஆதிகுடிகளான மேவோரி மக்களும், இத் தீவைச் சுற்றிலும் சிதறுண்டு கிடக்கும் சிறுசிறு தீவுகளில் வாழும் மக்களும் பேசும் மொழிகளுக்கும் தமிழுக்கும் ஒரு தொடர்பு உண்டு. இஃதன்றி, தென்னிந்திய மக்களுள் சில குலத்தினரும் மரபினரும் போற்றும் வழிபாட்டுச் சின்னங்களையும் அவர்களுள் கள்ளர்கள் என்பார் எய்யும் 'பூமராங்' என்னும் மீண்டுவரும் வேட்டைக் கத்தியையும் இந்தோனேசியாவிலும் பாலினீசியாவிலும் வாழும் ஆதிகுடிக ளிடம் காணலாம். மேலும் போர்னியா தீவின் ஆதி குடிமக்க ளான டையாக்குகளும், ஆனைமலையின் பழங்குடிகளான காடர் களும் மரமேறும் முறை ஒரேவிதமாக உள்ளது. இக் காடர்களும், தென்னிந்திய ஆதிகுடிகளுள் மற்றோர் இனத்தவரான மலை வேடர்களும் தம் முன் பற்களைத் துணித்துக்கொள்ளும் வழக்கம் ஒன்று உண்டு. மலேசிய நாட்டினரான ஜாகுன்களும் இப் பழக் கத்தை மேற்கொண்டுள்ளனர். மற்றும் தென்னாப்பிரிக்க வாசி களான நீக்குரோவர்களின் சாயை தென்னிந்திய ஆதிகுடிகள் சிலரிடம் தோற்றமளிக்கின்றது. பண்டைக் காலத்தில் இந் நீக்கிரோவர்களுக்கும், தென்னிந்தியருக்கும், தென்கிழக்கு ஆசியத் தீவினருக்குமிடையே தொடர்ந்த போக்குவரத்தும் இனக்கலப்பும் ஏற்பட்டிருக்கவேண்டும். லெமூரியாக் கண்டம் இருந்ததற்கும், அக்கண்டத்தில் வாழ்ந்த ஆதி மக்கள் வழி வந்த வர்களே தமிழர்கள் என்பதற்கும் மேலே கொடுத்த சான்றுகள் ஆதரவாகக் காட்டப்படுகின்றன. எனினும், தமிழ் மக்கள் லெமூரிய ஆதிகுடிகளின் நேர்வழி வந்தவர்தாமா என்ற ஐயப்பாடு நிகழாமல் இல்லை. இங்கு நாம் கருத்திற் கொள்ள வேண்டிய தொன்றுண்டு. ஐந்துகோடி யாண்டுகளுக்கு முன்பு, அதாவது, கங்கைவெளி யுயர்ந்து லெமூரியா மூழ்கிப் போம் போது உலகின்மேல் எங்கும் மனித இனமே தோன்றவில்லை.

அது தோன்றியதே சில நூறாயிரம் ஆண்டுகளுக்கு முன்புதான். எனவே, ஐந்து கோடி யாண்டுகட்கு முன்பு லெமூரியர்கள் வாழ்ந்திருந்தனர் என்பதும், அவர்களே தமிழர்கட்கு முன்னோர்களாவார்கள் என்பதும் எவ்வாறு பொருந்தும்?

தமிழர் தமிழகத்திலேயே பிறந்த ஆதிகுடிகள் என்பது லெமூரியக் கொள்கையினரின் முடிவு. இவர்கள் மேலும் ஒன்று கூறுவர். தமிழ் மக்களில் சிலர் நாட்டைவிட்டு வெளியேறிப் படர்ந்து சென்று மத்தியதரைக்கடற் பகுதியில் குடியேறிப் பின்பு பல பழம் நாகரிகங்களை வளர்த்தனர் என்றும் இவர்கள் கூறுகின்றனர். இக் கொள்கைக்குப் பேராதரவு கொடுத்தவர் பேராசிரியர் பி. டி. சீனிவாச அய்யங்கார் ஆவார்.

தமிழர்கள் தமிழகத்தின் ஆதிகுடிகள் என்ற கொள்கைக்கு விஞ்ஞான முறையிலான சான்றுகள் மிகுதியாக இன்னும் கிடைத்தில. பழங் கற்காலத் தமிழன் எந்த மனித இனத்தைச் சார்ந்தவன் என்று ஊகித்தறிவதற்குச் சான்றாக அக் காலத்திய மனித எலும்புக்கூடு ஒன்றும் இதுவரையில் கிடைக்கவில்லை. புதைபொருள் ஆராய்ச்சித் துறையில் மேற்கொள்ளப்பட்டுள்ள முயற்சிகளின் மூலம் தக்காணத்தில் வடுநகரிலும், ஜாவாவிலும், ஆப்பிரிக்காவிலும், மனித வடிவிலுள்ள எலும்புக் கூடுகள் கிடைத்துள்ளன.

வரலாற்றுக்கு முற்பட்டகாலத்து மக்களுடைய இன வேறுபாடுகள், நாகரிகம், பண்பாடு ஆகியவற்றைப்பற்றி ஆராயும் போது சிறப்பாக நாம் மூன்று துறைகளில் கருத்தூன்ற வேண்டும்.

1. தமிழரின் உடல் தோற்றம்.

2. புதைபொருள் ஆராய்ச்சிகள் வெளிப்படுத்தும் பாண்ட வகைகள், கருவிகள் ஆகியவற்றின் அமைப்பு. இத் துறைகளில் நம் கருத்தைச் செலுத்தி ஆதி தமிழரின் வரலாற்றுக் கூறுபாடுகளை நாம் ஆராயவேண்டும்.

3. அவர்களுடைய மொழியும், மொழிப் பிரிவுகளும்.

வரலாற்றுக்கு முற்பட்ட கால ஆராய்ச்சியில் மக்கள் இன வரலாற்றை மூன்று பிரிவுகளாக வகுத்து அவர்களைப்பற்றிய குறிப்புகளைத் தொகுத்தல் மரபு. பழங்கற்காலம், புதிய கற்காலம், பெருங்கற் புதைவு காலம் என்பன அவை.

இக் காலங்களில் வாழ்ந்துவந்த தமிழ் மக்கள் இன்ன இன்ன இனக் கலப்புடையவர்கள் என்று அறுதியிடுவது எளிதன்று. கொச்சியைச் சேர்ந்த காடர்களும் புலையர்களும், திருவிதாங்கூரைச் சேர்ந்த மலைப்பண்டாரங்களும், வயநாட்டுப் பணியர்களும், ஆந்திரநாட்டுச் செஞ்சுக்களும் பழங்கற்கால மக்களின் வழிவந்தவர்கள் என்று இனவியலார் (Ethnologists) சிலர் கருதுகின்றனர். பழங்கற் காலத்தவர்களைப் போலவே அம் மக்கள் அனைவரும் உணவைப் பொறுக்கிச் சேமித்து உண்கின்றனர். பயிரிடவோ, வேட்டையாடவோ அவர்கள் இன்னும் பயிலவில்லை; அந்த அளவுக்கு அவர்களுடைய அறிவும், நாகரிகமும் வளரவில்லை. காடர், புலையர் ஆகிய இனத்து மக்களில் நீக்கிரோவரின் இரத்தக்கலப்பைக் காணக்கூடும். நீக்கிரோவர்களைப் போலவே இவர்களும் குள்ளர்கள்; அவர்களைப் போலவே இவர்கட்கும் தலைமயிர் சுருட்டையாக உள்ளது. சென்னைக்கு அண்மையில் கிடைத்துள்ள பழங் கற்காலக் கருவிகள் தென்னாப்பிரிக்காவிலும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. நீக்கிரோ இனக் கூறுபாடுகள் தென்னிந்தியாவில் காணப்படுவதன் காரணத்தை ஒருவாறு ஊகித்தறியலாம். ஆதிகாலத்தில் தென்னிந்திய மக்களுக்கும் தென்னாப்பிரிக்க நீக்கிரோவர்களுக்குமிடையில் வாணிகத்தொடர்பு இருந்திருக்கக்கூடும். புயலில் சிக்கியோ, கரைதட்டியோ சிதையுண்ட கப்பல்களிலிருந்தும் உயிர் தப்பிய நீக்கிரோவர்கள் தென்னிந்தியாவில் கரையேறி நாட்டில் ஆங்காங்குக் குடியேறியிருக்கலாம். அன்றி, ஆப்பிரிக்க நீக்கிரோவர்கள் பேருமளவில் இடம்பெயர்ந்து வந்து தென்னிந்தியாவில் குடியேற்றங்களை அமைத்திருக்கலாம். இவை வெற்று ஊகங்களேயன்றி இவற்றுக்குச் சான்றுகள் கிடையா. ஆனால், லெமூரியாக் கண்டத்தைச் சார்ந்தவர்தாம் தமிழர் என்னும் கருத்து மிகப் பொருத்தமாய் உள்ளது.

புதிய கற்காலத்தில் கோலேரியர் என்ற இனத்தவர் இந்தியாவுக்குள் நுழைந்து பல பிரிவுகளாகப் பிரிந்து ஆங்காங்குக் குடியேறினர் என்றும், அவர்களுள் ஒரு பிரிவினர் ஒரிஸ்ஸாவிலும் ஆனைமலையிலும் குடியேறினர் என்றும் கூறுவர். இவர்கள் படு முரடர்கள் என்பர்; இவர்கள் வழிவந்தவர்கள் இன்றும் ஆனைமலையிலும் காணப்படுகின்றார்கள்; ஒரிஸ்ஸா மலைகளில் இப்போது தழையாடை புனைந்து வாழும் ஆதி குடிகளும் இவ்வினத்தவர்களே. கோலேரியர்களிடம் ஆஸ்திரேலிய ஆதிகுடிகளின் இனக் கலப்புக் காணப்படுகின்றது. கோலேரியர் முண்டா என்ற ஒரு மொழியைப் பேசினர். கோலேரியர்கள் இந்தியாவுக்குள் எப்போது நுழைந்தார்கள், எப்படி

நுழைந்தார்கள் என்று விளங்கவில்லை. ஆசாம் மாநிலத்தில் வாழும் காசிகளின் உடற்கூறுகளும் மலையாள மக்களின் உடற்கூறுகளும் சில வகைகளில் ஒத்துள்ளன. காசிகளின் உடற்கூறுகளைப்போலவே கோலேரியரின் உடற்கூறுகளும் காணப்படுகின்றன. ஆசாமில் கிடைத்துள்ள பெருங்கற் புதைவுகளின் அமைப்பும் தென்னிந்தியப் பெருங்கற் புதைவுகளின் அமைப்பும் ஒரே விதமாக உள்ளன. கோலேரியர்கள் இந்தியாவின் வடகிழக்குப் பகுதியினின்றும் இடம்பெயர்ந்து தென்மேற்காகப் படர்ந்தனர் போலும். அன்றி அவர்கள் மலையாள மக்களுடன் பண்பாட்டுத் தொடர்பு கொண்டிருந்தனர் என்றும் கொள்ளலாம். மத்தியப் பிரதேசம், வங்காளம் ஆகிய இடங்களில் வாழும் ஆதிகுடிகள் பேசும் மொழிகள் சிலவற்றில் திராவிட மொழிகளின் கூறுபாடுகள் கலந்துள்ளன என்பதில் ஐயமில்லை. எனவே, முன்னொரு காலத்தில் கங்கைக்கரைகளிலும் திராவிட இனத்து மக்கள் பரவி வாழ்ந்து வந்தனர் என்று கொள்ளுவதற்கு இடமுண்டு.[1]

கோலேரியர் நாடோடிகள் அல்லர்; வேட்டையாடியே பிழைத்தவர்களும் அல்லர். அவர்கள் கைதேர்ந்த உழவர்கள். ஆங்காங்குகுடியேற்றங்கள் அமைத்து வாழ்ந்து வந்தவர்கள். அவர்கள் விலங்குகளைக் கடவுளாக வணங்கினர்; தென்புலத்தாரை வழிபட்டனர்; உயிர்நீத்தவர்கட்கும் பேய்கட்கும் பூதங்கட்கும் உயிர்ப்பலி கொடுத்தனர். இறந்த பிறகும் உயிர்கட்கு வாழ்வு உண்டு என்று அவர்கள் நம்பினார்கள். அவர்கள் தென்புலத்தாரை வழிபட்ட காரணத்தைக்கொண்டு ஓரளவு ஒழுக்கத்தைக் கடைபிடித்து வாழ்ந்தவர்கள் என்று துணியலாம். அவர்கள் மேற்கொண்டுள்ள பழக்கவழக்கங்கள் பல திராவிட மக்களின் வாழ்க்கை முறைகளிலும் அவர்கள் வழியே பிற்காலத்திய இந்து சமூகத்திலும் இடம் பெற்றுள்ளன. ஆனைமுகதது விநாயகக் கடவுளும், குரங்கு வடிவங் கொண்ட அனுமனும் ஆஸ்திரேலிய ஆதிகுடிகளின் விலங்கு வழிப்பாட்டினின்றும் உருவானவர்கள் என்று சிலர் கருதுவர். இக் கருத்தை மெய்பிக்கப் போதுமான சான்றுகள் இல. ஏனெனில், இக் கடவுளரின் வழிபாடு இந்தியாவிற்றான் காணப்படுகிறேதேயன்றி ஆஸ்திரேலிய ஆதிகுடிகளின் வாழ்க்கையில் காணப்படவில்லை. கிடைத்தவற்றிலிருந்து இவர்கள் முற்காலத்தில் ஒன்றாக வாழ்ந்திருக்கலாம்.

புதிய கற்காலம் நிகழ்ந்தபோதே தமிழகத்துடன் தொடர்பு கொண்ட மற்றுமோர் இனத்தினர் திராவிடர்கள். இவர்கள்

1. Caldwell's Comparative Grammar, P. 37-Para-1.

தமிழகத்திலேயே பிறந்து வளர்ந்த ஆதிகுடிகள் என்று சிலர் கருதுகின்றனர். திராவிடர்கள் தமிழகத்தினின்றும் பரவிச் சென்று மத்திய தரைக் கடல் நாடுகளில் குடியேறினர் என்பது இவ் வாய்வாளரின் கொள்கையாகும். வேறு சிலர் இவர்கள் யாவரும் லெமூரியாவைச் சார்ந்தவர் என்பர். பண்டைய காலத்திய மத்தியதரைக் கடற்பகுதி மக்களுக்கும் திராவிடருக்குமிடையே பல ஒற்றுமைகள் காணப்படுகின்றன. திராவிடர்கள் மத்தியதரைக் கடல் வாழ்க்கையைக் கைவிட்டு வெளியேறி, இமயமலையின் வடமேற்குக் கணவாய்களின் வழியாக இந்தியாவுக்குள் நுழைந்தனர் என்று சிலர் கருதுவர். இக் கருத்தை நிலைநாட்டப் பல சான்றுகள் எடுத்துக் காட்டப்படுகின்றன. பலுசிஸ்தானத்தில் வழங்கும் பிராஹுவி மொழிக்கும், திராவிட மொழிகட்கும் உள்ள இனவொற்றுமைகள் அச் சான்றுகளில் சிறந்தவையாம். ஆசியாமைனரைச் சேர்ந்த லிசியர்களும் மத்திய தரைக்கடல் இனத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் 'த்ரிம்ளை' (Trimmlai) எனவும் அழைக்கப்பட்டதாக இவர்களுடைய கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. இச் சொல்லின் ஒலி 'திரமிளம்', 'தமிழ்' என்னும் சொற்களின் ஒலியுடன் ஓரளவு இணக்கமுற்றதாகக் காணப்படுகின்றது. மேலும், பண்டைய சுமேரியர்களுக்கும் தமிழர்களுக்குமிடையிலேயும் சில ஒற்றுமைகள் உண்டு. கடவுள் வழிபாட்டிலும், கோயில் அமைப்பிலும் இவர்களுடைய பழக்க வழக்கங்கள் இயைந்துள்ளன. மிட்டன்னிகள், எலாமைட்டுகள், காசைட்டுகள் போன்ற பண்டைய மேற்காசிய மக்களுடைய மொழிகளுக்கும் தமிழுக்கும் நெருங்கிய ஒரு தொடர்பைக் காணலாம். ஈரானின் பழங்குடி மக்களான கஸ்பியர்களின் தலையும், திராவிடர்களின் தலையும் வட்டவடிவமாக உள்ளன. இச் சான்றுகளைக் கொண்டு மத்திய தரைக் கடல் மக்கள் சிலர் ஈரான் வழியாக வெளியேறி, இந்தியாவின் வடமேற்குப் புறத்தில் நுழைந்து வந்து தென்னிந்தியாவில் குடியேறினர் என்று ஊகிக்க இடமுண்டு.

இந்தியாவின் வடகிழக்கில் வாழ்ந்து வந்த ஆதிகுடிகளான காசிகளின் பெருங்கற் புதைவுகளுக்கும் தென்னிந்தியப் பெருங்கற் புதைவுகளுக்குமிடையே வேறுபாடுகள் உண்டு. காசிகளின் புதைகுழிகள் புதிய கற்காலத்தைச் சார்ந்தவை. ஆனால் தென்னிந்தியப் புதைவுகள் இரும்புக் காலத்தியவை. வடிவ அமைப்பிலும், கட்டடக் கூறுபாடுகளிலும் இவ்விரு புதைவுகளும் வேறுபடுகின்றன. ஆனால், மத்திய தரைக்கடல் மக்கள் அமைத்துக் கொண்டிருந்த புதைகுழிகளுக்கும் தென்னிந்தியக் குழிகளுக்குமிடையே பல இயைபுகள் உண்டு. இங்கிலாந்து, போர்ச்சுக்கல்

ஸ்பெயின், பிரான்ஸ், ஜெர்மனி, சுவீடன், கருங்கடலின் கீழ்க் கரை நாடுகள், வடஆப்பிரிக்கா, காக்கேசிய நாடுகள், பாலஸ்தீனம், ஈரான் ஆகிய இடங்களில் கிடைக்கும் பெருங்கற் புதை குழிகள் அடுத்துத் தென்னிந்தியாவிற்குள் காணப்படுகின்றன. உலகில் வேறெங்குமே அவற்றைக் காணமுடியாது. இக் காரணத்தைக் கொண்டு மத்திய தரைக்கடல் மக்கள் தென்னிந்தியாவுக்குக் குடிபெயர்ந்து வந்தவர்கள் என்று ஊகிக்கலாம். மேக்ரான், பலூசிஸ்தானம், சிந்து ஆகிய தரைப் பகுதிகளைக் கடந்தும், கடல் வழியாகவும் தென்னிந்தியாவுக்கு வந்து குடியேறியவர்கள் திராவிட இனத்தினர் என்று சில ஆய்வாளர் கருதுகின்றனர். மேற்காசிய மக்களுக்கும் திராவிடருக்குமிடையே காணப்படும் பழக்கவழக்கங்களிலும் ஈரான், மெசப்பொடொமியா ஆகிய நாட்டு ஊர்ப் பெயர்களிலும் திராவிடரின் ஊர்ப் பெயர்களிலும் பல ஒற்றுமைகள் அமைந்திருப்பது இதற்குச் சான்றாகக் காட்டப்படுகின்றது. மக்கள் பெருவாரியாகக் குடிபெயரும்போது அவர்களுடைய நாகரிகமும், பண்பாடும், பழக்கவழக்கங்களும் அவர்களுடனே படர்வது இயைபு. இரு வேறு இனத்தினர் தமக்குள் வாணிகத் தொடர்பு கொண்டிருக்குங் காலத்தில் அவர்களுடைய நாகரிகங்களும் பண்பாடுகளும் ஓரளவு ஒன்று கலப்பதுண்டு. ஆனால், அவை ஒரே விதமாக உருமாறிவிட முடியாது. வரலாற்றுக்கு முற்பட்ட மிகப் பழங்காலத்தில், இக் காலத்தில் இருப்பதைப் போன்று விரிவான, விரைவான போக்குவரத்துத் தொடர்புகள் கிடையா. இருவேறு மக்களினம் தத்தம் பண்பாடுகள் ஒன்று கலந்து உருமாறும் அளவுக்கு வாணிகத் தொடர்பை நீடித்து வந்தனர் என்று கொள்ளுவது பொருத்தமாகாது; எனவே மத்தியதரைக் கடல் மக்கள் தென்னிந்தியாவுடன் வாணிகத் தொடர்பைக் கொண்டார்களோ, அல்லரோ, பெருந்தொகையினர் தென்னிந்தியாவுக்குக் குடிபெயர்ந்து வந்து ஆங்காங்கு வாழலானார்கள் என்ற கருத்து இயைபுடையதாகத் தோன்றுகின்றது. இவை தவிர லெமூரியாவிலிருந்தே இக்கூட்டத்தினர் அனைவரும் தென்னிந்தியாவுக்கு வந்து, இங்கிருந்தே பின் சிலர் சென்றிருக்கலாம்.

தென்னிந்தியாவில் திராவிடரின் குடியேற்றம் எப்போது நேர்ந்திருக்கக்கூடும்? தமிழரின் நாகரிகம் என்றொரு தனித்த நாகரிகம் தோன்றி வளர்ச்சியுற்றது எக்காலமாக இருக்கலாம்? இக் கேள்விகட்கு விடை காணும் முயற்சியில் விருப்பு வெறுப்புக்கு இடங்கொடுக்கலாகாது. நேரில் கிடைத்துள்ள அகச்சான்று புறச்சான்றுகளைக் கொண்டும், ஆய்வு விதிகளைக் கொண்டும்

ஆய்வாளர்கள் உண்மை நாடவேண்டும். இத்தகைய மறுக்க முடியாத சான்றுகள் இன்று கிடைத்துள்ளவை மிகவும் குறைவு என்பதை நாம் ஒப்புக்கொள்ளவேண்டும். அகழ்வாராய்ச்சி, இலக்கியம், மொழியமைப்பு ஆகியவற்றின் மூலம் அறிய வேண்டிய செய்திகள் விரிந்துள்ளன. ஆதிச்சநல்லூர், அரிக்க மேடு முதலிய இடங்களில் கிடைத்துள்ள புதைபொருள்கள், அயல்நாட்டுப் பயணிகளின் பூகோளக் குறிப்புகள், சங்க இலக்கியம் இவற்றைக் கொண்டு பண்டைய தமிழரின் வரலாற்றையும் பண்பாடுகளையும் விரிவான முறையில் ஆய்ந்தறிய வாய்ப்புகள் உள்ளன.

மேற்காசியப் பகுதிகளில் கிடைத்துள்ள பெருங்கற் புதைவுகளின் காலம் கி. மு. **2500-2000** என்று அறுதியிடப்பட்டுள்ளது. எனவே, லெமூரியாவிலிருந்து முற்காலத்தில் சென்று இக் கால அளவில் அவ்விடங்களில் வாழ்ந்திருந்த பண்டைய மக்கள், குடி பெயர்ந்து வந்து இந்தியாவுக்குள் புகுந்து தென்னிந்தியாவுக்கு வந்து வாழ்க்கையைத் தொடங்கித் திராவிட இனத்தைத் தோற்றுவித்தனர் என்று கொள்ளுவது வரலாற்றுக்கு உடன் பாடாகும். இக் குடியேற்றம் கி. மு. **2500**ஆம் ஆண்டளவிலேயே தொடங்கியிருக்க வேண்டும்.

இந்தியாவில் நடைபெற்ற அகழ்வாராய்ச்சிகளில் மிகப் பெரியது ஆதிச்சநல்லூரில் மேற்கொண்டதொன்றாகும். வரலாற்றுக்கு முற்பட்ட காலத்துடன் தொடர்பு கொண்டுள்ள புதைபொருள்கள் இங்கு ஏராளமாகக் கிடைத்துள்ளன. மனித எலும்புக் கூடுகள், உரல்கள், மெருகிட்ட மட்பாண்டங்கள், இரும்பாலான சில கருவிகள், பொன்னாலும் வெண்கலத்தாலும் செய்யப்பட்ட அணிகலன்கள், பொன் வாய்ப்பூட்டுகள், சிறு வேல்கள் ஆகியவை அடங்கிய தாழிகள் ஆதிச்சநல்லூரில் கிடைத்துள்ளன. இவற்றைப்போன்ற புதைபொருள்கள் சைப்ரஸ் தீவிலும், பாலஸ்தீனத்திலும் காணப்படுகின்றன. ஆனால், அவ்விடங்களில் இரும்பாலான கருவிகள் கிடைக்க வில்லை. ஆனால், ஆதிச்சநல்லூரில் இரும்புக் களைக்கொட்டுகளும் சூலங்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இக் காரணத்தைக் கொண்டு ஆதிச்சநல்லூர் நாகரிகம் சற்றுப் பிற்பட்ட காலத்தைச் சார்ந்ததெனக் கொள்ளவேண்டி உள்ளது.

பழங் கற்காலத்திய தமிழ் மக்களைப் பற்றிய சான்றுகள் பல கிடைத்துள்ளன. செங்கற்பட்டு மாவட்டத்தில் பல்லாவரத்துக்கு அண்மையில் கற்களினாலான கோடரிகள், உளிகள், சுறண்டிகள், கத்திகள் ஆகிய கருவிகள் சில கிடைத்துள்ளன. இக்

கருவிகள் மிகவும் கரடுமுரடாகச் செதுக்கப்பட்டுள்ளன. கற்கருவிகளைச் செம்மையாகச் செதுக்கி மெருகிட அக்கால மக்கள் பயின்றிலர் போலும். கற்கருவிகளையே யன்றி மரத்தாலான ஈட்டிகளையும், தண்டுகளையும் அவர்கள் கையாண்டனர் என்று ஊகிக்கவும் இடமுள்ளது. தமிழகத்தில் வடஆர்க்காடு, செங்கற்பட்டு ஆகிய மாவட்டங்களிலும் இப் பழங்கற்காலக் கருவிகள் கிடைத்துள்ளன. இவற்றைச் சமைப்பதில் கைத்திறனோ நுட்ப அறிவோ பயன்பட்டதாகத் தெரியவில்லை. வேறு சில இடங்களில் ஈட்டிகள், தோண்டு கருவிகள், வெட்டுக் கருவிகள், சம்மட்டிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவை யாவும் கற்களில் செதுக்கப்பட்டவை. சென்னைக்கு அண்மையில் கொற்றலையாற்றுப் படுகையிலும் வடமதுரையிலும் பழங் கற்காலக் கருவிகள் பல கிடைத்துள்ளன. கைக்கோடரியைச் செதுக்குவதில் பழங்கற்கால மக்களுக்கு ஏற்பட்டிருந்த பயிற்சித் திறன் தென்னிந்தியாவிலும் தென்னாப்பிரிக்காவிலும் ஒரே விதமாகக் காணப்படுகின்றது. இதைக்கொண்டு இவ்விரு நிலப் பகுதிகளுக்கிடையே பழங்கற்காலத்தில் மக்கள் போக்குவரத்தும் குடியேற்றங்களும் ஏற்பட்டிருக்கலாம் என்று எண்ணவேண்டியவர்களாக இருக்கின்றோம். காடுவெட்டி நிலந்திருத்திக் கொள்ளுவதற்கு ஏற்ற உறுதியான கருவிகள் செய்துகொள்ள அறியாதவர்களாய் அக்கால மக்கள், காடுகளையும் மலைகளையும் ஒதுக்கிவிட்டுச் சமவெளிகளிலும் பீடபூமிகளிலுமே வாழ்ந்து வந்தனர். தமிழகத்தின் தென்கோடியில், சிறப்பாக மதுரைக்குத் தெற்கில், பழங்கற்காலக் கருவிகள் கிடைக்கவில்லை. எனவே, அங்கு அக்காலத்தில் மக்கள் வாழ்க்கை தொடங்கவில்லை என்று கருதலாம். ஏனெனில், அவ்விடங்களில் கற்கருவிகளைச் செதுக்குவதற்கு வேண்டிய ஒருவகைப் பளிங்குக்கல் (Quartzite) காணப்படுவதில்லை. அன்றியும் மக்கள் வாழ்க்கைக்கு இடங்கொடாத அளவு அங்குக் காடுகள் அடர்ந்து வளர்ந்திருக்கவேண்டும். பழங்கற்காலக் கருவிகள் தமிழ்நாட்டில் வடஆர்க்காடு, செங்கற்பட்டு ஆகிய மாவட்டங்களில் மிகுதியாகக் கிடைக்கின்றன. அங்கெல்லாம் பழங்கற்கால மக்கள் பரவி வாழ்ந்தனர் என்று அறியலாம்.

பழங்கற்கால மக்கள் ஓரிடத்திலும் நிலையாகத் தங்கி வாழ்ந்து வந்ததாகத் தெரியவில்லை. அவர்கள் இடம்விட்டு இடம் நகர்ந்துகொண்டே இருந்தனர். பெரும்பாலும் அவர்கள் சமவெளிகளில் வாழ்ந்து வந்தனராயினும், சிற்சில சமயம் காட்டு விலங்குகளுக்கு அஞ்சி மலைக்குகைகளில் ஒடுங்கி வாழ்ந்ததுமுண்டு.

பழங்கற்காலம் கி. மு. 35,000 ஆண்டுகட்கு முன்பிருந்து சுமார் கி.மு. 10,000 ஆண்டுவரை நிகழ்ந்திருக்கக்கூடும் என அறுதியிட்டுள்ளனர். உலக வரலாறுகளில் பழங்கற்காலத்தை முற்பகுதி யென்றும் பிற்பகுதி யென்றும் வரையறுத்துள்ளனர். இத்தகைய பாகுபாடு ஒன்று தமிழகத்து வரலாற்றுக்கும் பொருந்துமா என்பதைப்பற்றிப் புதைபொருள் ஆய்வாளரிடையே கருத்து வேற்றுமை நிலவுகின்றது.

பழங்கற் காலத்துக்கும் புதிய கற்காலத்துக்குமிடையே இடைக்கற்காலம் ஒன்று நிகழ்ந்தது. அக்கால அளவில் வாழ்ந்த மக்கள் மிகச் சிறிய கற்கருவிகள் செதுக்கிக்கொண்டனர். சிக்கி முக்கிக் கல், அகேட் (Agate), செர்ட்டு (Chert), ஜாஸ்பர் (Jasper) போன்ற இரத்தினக் கற்களாலும் இக் கருவிகள் சமைக்கப் பட்டன. திருநெல்வேலி மாவட்டத்தில் சாயர்புரத்திலும், கருநாடக மாநிலத்தில் பிரமகிரியிலும், கிருஷ்ணா, கோதாவரி ஆற்றுப் படுகைகளிலும் இக் கருவிகள் கிடைத்துள்ளன. இடைக் கற்காலத்தின் முற்பகுதியில் அமைந்த புதைகுழிகளில் மட்பாண்டம் காணப்படவில்லை. ஏனெனில், மட்பாண்டம் வனையும் கலையைப் பிற்பகுதியிற்றான் மக்கள் பயின்றனர். இடைக்கால முற்பகுதியிலேயே மக்கள் வேட்டையாடி வயிறு வளர்த்ததற்கான சான்றுகள் கிடைத்துள்ளன. அவர்கள் மான், பன்றி, ஆடு, எலி ஆகியவற்றைப் பிடித்துத் தின்று வயிறு பிழைத்ததற்கும் சான்றுகள் உள்ளன. பிணங்களை மண்ணில் புதைக்கும் வழக்கமும் அப்போதே தொடங்கிவிட்டது.

புதிய கற்காலத்தில் வாழ்ந்த மக்கள் வாழ்க்கையில் பல சீர்திருத்தங்கள் காணப்படுகின்றன. அவர்கள் கற்கருவிகளை ஒழுங்காகவும் வழுவழுப்பாகவும் செதுக்கினர். இவை படிக் கட்டுக் கல் (Trap Rock) என்ற ஒருவகைக் கல்லினால் செய்யப் பட்டன. உளிகள், சம்மட்டிகள் போன்ற கருவிகளையெல்லாம் அவர்கள் அழகாகச் செதுக்கிப் பளப்பளப்பாகத் தேய்த்து மெருகூட்டியுள்ளனர். திருநெல்வேலி, மதுரை, திருச்சிராப் பள்ளி, சேலம், வடஆர்க்காடு, செங்கற்பட்டு ஆகிய மாவட்டங் களில் புதிய கற்காலக் கருவிகள் அகழ்வாராய்ச்சியின் மூலம் கிடைத்துள்ளன.

புதிய கற்கால மக்கள் ஆங்காங்குக் குடியேறி நிலையான வாழ்க்கையில் அமர்ந்துவிட்டனர். உழவுத் தொழிலையும் வளர்க்கலாயினர்; ஆடு மாடுகளைப் பழக்கிக்கொள்ளத் தொடங்கினர். படகுகள் கட்டிக் கடலில் ஓட்டக் கற்றுக்கொண் டனர். இம்மக்கள் பயின்ற கலைகள் அனைத்திலும் நெருப்பு

மூட்டக் கற்றுக்கொண்டதுதான் அவர்கள் வாழ்க்கையில் நாம் காணும் தனிச்சிறப்பாகும். சிக்கிமுக்கிக் கற்களைத் தட்டியும், மரத்தைக் கடைந்தும் இவர்கள் நெருப்பு மூட்டினார்கள். இவர்கள் மட்பாண்டங்களையும் வனைந்தார்கள். கையாலும், சக்கரங்களைக் கொண்டும் சட்டிபானைகள் செய்தார்கள். பஞ்சாலும் மயிராலும் ஆடைகள் நெய்து அணிந்தார்கள்; ஓவியந்தீட்டவும் இவர்கள் ஓரளவு கற்றிருந்தனர். தம் வீட்டுச் சுவர்களின்மேல் வேட்டை நிகழ்ச்சிகளையும் நாட்டியக் காட்சி களையும் ஓவியங்களாகத் தீட்டினர். புதிய கற்காலப் புதைகுழி களில் சீப்புகள், எலும்பினாலும் சிப்பியினாலும் கடைந்த மணிகள் கண்டெடுக்கப்பெற்றுள்ளன. அக் கால மக்களின் கலை யுணர்ச்சியை இச் சான்றுகள் எடுத்துக்காட்டுகின்றன. இவர் களும் பிணங்களைப் புதைப்பதையே வழக்கமாகக் கொண் டிருந்தனர்.

தமிழகத்தில் சேலம் மாவட்டத்தில் கண்டுபிடிக்கப்பெற்ற புதிய கற்காலப் பொருள்கள் வரலாற்றுச் சிறப்புடையவைதாம். இம்மாவட்டத்தில் பையம்பள்ளி என்னும் இடத்தில் தேய்த்து மெருகிட்ட கற்கருவிகள் பல கிடைத்துள்ளன. திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, திருநெல்வேலி ஆகிய பகுதிகளிலும் புதிய கற்காலக் கருவிகளும், வேறு பல வாழ்க்கைவசதிப் பொருள் களும் அகழ்வாராய்ச்சியில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. பன்னி ரண்டு வகைக் கோடரித் தலைகளும் (Celts) என்னும் வகைச் சம்மட்டிகளும், இருவகையான கொத்துக் கருவிகளும் (adzes), அறுவகை உளிகளும், கருமாரப் பட்டடைக் கற்களும், உரல்களும், உலக்கைகளும், தட்டுகளும், தண்டுகளும், இருவகை எந்திரக் கற்களும், அம்மி குழவிகளும், தீட்டு கற்களும், எடைக் கற்களும், கற்சட்டிகளும், அம்புத் தலைகளும் அவற்றுள் சிறப் பானவை.

வரலாற்றுக்கு முற்பட்ட தமிழ் மக்கள் மிகவும் அகன்ற குழி களில் பிணங்களைப் புதைக்கும் வழக்கத்தை மேற்கொண்டிருந் தனர். இக் குழிகள் 'பெருங்கற் புதைவுகள்' என்று அழைக்கப் படுகின்றன. இப் புதைவுகள் ஏற்பட்ட காலத்துக்குப் 'பெருங்கற் புதைவு' காலம் (Megalithic Period) என்று பெயர். புதிய கற்காலம் முடிவுற்றவுடன் ஏற்பட்டவை இப் பிணக்குழிகள். கற்காலப் பிணக்குழிகள் காணாத பல புதுமைகளை இக் குழிகளில்காணலாம். பெருங்கற் புதைகுழிகள் மிகமிகப் பெரி யவை. இவற்றுள் புதைக்கப்பட்டிருக்கும் பொருள்களும் பலவகை யானவை. பிணம் புதைப்பதற்காக மட்டும் இவை ஏற்பட்டன வல்ல; இறந்தவர்களின் நினைவுச் சின்னங்களாகவும் இவை

அமைந்துள்ளன. உழவு நிலங்களையடுத்துள்ள மலைச்சரிவு களிலும் மேடுகளிலும் இப் புதைவுகள் மிகுதியாகக் காணப்படு கின்றன. மக்கள் நிலையான வாழ்க்கையில் அமர்ந்து உழவை மேற்கொண்ட பிறகு ஏற்பட்ட குழிகள் இவை எனக் கொள்ள லாம். பெருங்கற் புதைவுகள் வடஆர்க்காடு, தென்னார்க்காடு, செங்கற்பட்டு ஆகிய மாவட்டங்களில் பெருமளவில் தோண்டி யெடுக்கப்பட்டுள்ளன. கேரளத்தில் கொச்சிப் பகுதியில் 'குடைக் கல்' அல்லது 'தொப்பிக்கல்' என்ற குழிகளை அகழ்ந்து வெளிப் படுத்தி யிருக்கின்றார்கள். தென்னார்க்காட்டில் சங்கமேடு என்னும் இடத்திலும், செங்கற்பட்டு மாவட்டத்தில் சானூர், அமிர்தமங்கலம், குன்றத்தூர் என்னும்இடங்களிலும் பெருங்கற் புதை குழிகள் கிடைத்துள்ளன.

பெருங்கற் புதைவுகள் மத்தியதரைக் கடற்பகுதியிலும் காணப்படுகின்றன. அவை கி.மு. 2500—1500 ஆண்டுகளில் ஏற்பட்டவை என்று புதைபொருள் ஆய்வாளர் அறுதியிட் டுள்ளனர். அக் குழிகளுக்கும் தமிழகத்துப் பெருங்கற் புதைவு கட்குமிடையே பல ஒற்றுமைகள் காணப்படுகின்றன. ஆனால், வேறுபாடும் காணப்படுகின்றது. மத்தியதரைக் குழிகளில் இரும்புக் கருவிகள் கிடைத்துள்ளன. தமிழகக் குழிகளில் இரும்பே கிடைக்கவில்லை. 'கார்பன் 14' என்னும் வேதியியல் மின்னணுச் சோதனையின் மூலம் பிரமகிரி 'கற்கோடரி நாகரிகம்' கி.மு. 1000 ஆண்டுகட்கும் முற்பட்டதெனத் தோன்றுவதால், தமிழகப் புதைகுழிகள் கி.மு. 1000 ஆம் ஆண்டளவில் ஏற்பட் டிருக்கக்கூடும் என்று ஊகித்தறியலாம்.

செங்கற்பட்டு மாவட்டத்தில் மட்டும் சுமார் இருநூறு பெருங்கற் புதைவுகள் அகழப்பெற்றுள்ளன. அவை இருவகை யாக அமைந்துள்ளன; ஒன்று 'குகை வட்டங்கள்' என்பது. இவ் வகைக் குழிகள் ஓர் அறையைப் போல அமைக்கப்பெற்றுள்ளன. குழியின் அடிமட்டத்தில் பலகைக்கல் ஒன்று பாவப்பட்டுள்ளது; மற்றொரு பலகைக்கல் குழியை மூடி நிற்கின்றது. தரை மட்டத்தில் குழிவாயைச் சுற்றி ஒற்றை வட்டமாகவோ அன்றி ஒன்றுக்குள் ஒன்றாக இரு வட்டங்களாகவோ கற்கள் செங்குத் தாக நாட்டப்பட்டுள்ளன.

இரண்டாம் வகை, 'குழிவட்டங்கள்' என்பது. இவை ஒவ்வொன்றிலும் ஒரு தாழியோ ஒன்றுக்கு மேற்பட்ட தாழிகளோ புதைக்கப்பட்டுள்ளன; இத் தாழிகள் யாவும் மண்ணாலானவை. இவற்றுள் பிணங்கள் புதைக்கப்பட்டன. சில தாழிகளுக்குக்

கால்கள் அமைக்கப்பட்டுள்ளன. குழி வட்டங்களைச் சுற்றி ஒற்றை வட்டக் கற்களை நாட்டியுள்ளனர்.

பெருங் கற்புதைவு காலத்தின் மக்கள் கற்கருவிகளைக் கைவிட்டு இரும்புக் கருவிகளைக் கையாளலானார்கள்.

தமிழகத்தில் புதிய கற்காலத்தையடுத்து 'இரும்புக் காலம்' தொடங்கிற்று. ஆனால், வடஇந்தியாவில் புதிய கற்காலத்தையடுத்துச் 'செம்புக் காலம்' தொடங்கிற்று. கற்காலத்துக்கும் இரும்புக் காலக்துக்கும் இடையில் செம்பு அல்லது வெண்கலக் காலம் ஒன்று தமிழகத்தில் நிகழாதது வியப்பாகவுள்ளது. இந் நிலைக்கு இரு வேறு காரணங்கள் காட்டப் பெறுகின்றன. ஒன்று, மக்கள் வெளிநாடுகளிலிருந்து தமிழகத்துக் குடி பெயர்ந்து வந்தபோது முதன்முதல் இரும்பைத் தம்முடன் கொண்டு வந்திருக்கலாம்; மற்றொன்று, கற்காலத்திலேயே மக்கள் இரும்பைக் கண்டுபிடித்துப் பயன்படுத்தத் தொடங்கியிருக்கலாம். இரண்டாம் காரணமே பொருத்தமானதாகத் தோன்றுகிறது. மட்கலங்கள் வனைவதற்குத் தகுதியான மண்ணைத் தேடியபோது பலவகையான மண்ணையும், பாறைகளையும் ஆராய்ந்து பார்த்திருப்பார்கள்; பச்சை மட்கலங்களைச் சூளையில் சுட்டிருப்பார்கள். அப்போது அவர்கள் தற்செயலாக இரும்பைக் கண்டுபிடித்திருக்கலாம். மத்தியதரைக் கடலிலுள்ள கிரீட் என்னும் தீவிலும் பாலத்தீனத்திலும் காணப்படுவதைப் போலவே ஆதிச்சநல்லூரிலும் கற்கருவிகளுடன் இரும்புக் கருவிகளும் கலந்து காணப்படுகின்றன. செங்கற்பட்டில் பெரும்பேயர் என்னும் இடத்திலும், கேரளத்தில் தலைச்சேரி என்னும் இடத்திலும் இவ்வாறே கற்கருவிகளும், இரும்புக் கருவிகளும் கலந்தே கிடைத்துள்ளன. எனவே, தமிழகத்தில் கற்காலம் முடிவுறும் போதே இரும்புக் காலமும் தொடங்கிவிட்டது என்று கருத இடமேற்படுகின்றது.

# 4. சிந்துவெளி அகழ்வாராய்ச்சி

ஆரியர்கள் இந்தியாவுக்குள் நுழையும்போது வடமேற்கு இந்தியாவிலும், வடஇந்தியாவிலும் திராவிட இனத்து மக்கள் வாழ்ந்து வந்தனர் என்று சில ஆய்வாளர்கள் கருதுகின்றனர். ஆக்ஸ்போர்டைச் சேர்ந்த பேராசிரியர் பர்ரோ (Burrow) என்பார் அவர்களுள் ஒருவர். ஆரிய மொழியை நன்கு ஆய்ந்து இருக்கு வேதத்தில் இருபது திராவிட மொழிச் சொற்கள் ஆளப் பட்டிருப்பதாகக் கூறுகின்றார். ஏற்கெனவே சிந்து கங்கை வெளியில் செழித்து வாழ்ந்திருந்த திராவிடரிடமிருந்து பிற்காலத்தில் வந்து குடியேறிய ஆரியர் பல திராவிட மொழிச் சொற்களைத் தம் மொழியில் ஏற்றுக்கொண்டனர் என்பது இவருடைய முடிபாகும். வேறு பல ஆய்வாளரும் இவருடைய கருத்தை ஒப்புக்கொண்டுள்ளனர். லஹோவரி என்னும் ஆராய்ச்சி யாளர் வியப்பூட்டும் ஊகம் ஒன்றை வெளியிட்டுள்ளார். அவர் பல மொழிகளை ஆராய்ந்து ஒப்புநோக்கி முடிவாகத் திராவிட மொழிக்கும் ஸ்பெயின் நாட்டு பாஸ்க் (Basque) மக்களின் மொழிக்கும் இடையே பல ஒற்றுமைகளைக் கண்டார். இவ்விரு மொழிகளும் ஒரே மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவை என்று ஒரு முடிவுக்கு வந்தார். சுமேரிய, எலாமைட், கப்படோசிய மொழி களும் இக் குடும்பத்தில் பிறந்தவையே என்று அவர் கருதினார். ஸ்பானிய நாட்டைச் சேர்ந்த ஐபீரியா முதல் இந்தியாவரையில் அமைந்துள்ள நாடுகள் அனைத்தும் சமயப் பழக்கவழக்கங்களி லும், சடங்குகளிலும் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தன என்று இவர்கண்டார்.

லஹோவரியின் முடிபுகளையும் நாம் ஓரளவு ஏற்றுக் கொள்ள வேண்டிய நிலையில் உள்ளோம். சுமேரியா, மெசப் பொடோமியா போன்ற மேற்காசிய நாடுகட்கும் திராவிடர் கட்குமிடையே நெருங்கிய நாகரிக, பண்பாட்டுத் தொடர்புகள் அமைந்துள்ளன. திராவிடர்கள் மேற்காசியாவினின்றும் குடி பெயர்ந்து ஈரான் வழியாக வந்து வடமேற்குக் கணவாய்களின் மூலம் சிந்துசமவெளியில் இறங்கிக் குடியமர்ந்து அங்கொரு மாபெரும் நாகரிகத்தை வளர்த்திருக்கக் கூடும். பிறகு அவர்கள் எக் காரணத்தினாலோ சிந்துவெளியைக் கைவிட்டுத் தெற்குப்

படர்ந்து தமிழகத்தில் தங்கி இங்கொரு நாகரிகத்தை வளர்த்திருக்கக்கூடும். அல்லது லெமூரியாவிலிருந்து தென்னிந்தியா ஆப்பிரிக்கா முதலிய இடங்களுக்குச் சென்று சிலர் மத்திய தரைக்கடல் நாடுகளில் சில காலம் வாழ்ந்து, வடஇந்தியா வழியாகத் தெற்கு வந்திருக்கலாம்.

தமிழர் யார் ?' என்னும் கேள்விக்கு விடைகாணும் முயற்சியில் ஈடுபட்டிருந்த வரலாற்றாய்வாளருள் மிகவும் சிறந்தவர் ஹீராஸ்பாதிரியார். சிந்துவெளியில் வரலாற்றுப் புகழ்பெற்ற அகழவாராய்ச்சிகள் நடைபெற்றன. அவற்றினின்றும் புதைபொருள்கள் பல கண்டெடுக்கப்பட்டன. இவ்வாராய்ச்சியில் ஈடுபட்டிருந்தவர்கள் சிந்துவெளியில் மிகப் பழங்காலத்தில் பெரியதொரு நாகரிகம் செழித்து வளர்ந்திருந்ததென்றும், பிறகு எக் காரணத்தாலோ அது அறவே அழிந்து மறைந்து போயிற்றென்றும் சில கருத்துகளை வெளியிட்டனர். சிந்துவெளியில் மொகஞ்சதாரோ, ஹாரப்பா என்ற இரு நகரங்கள் அகழ்வாராய்ச்சியின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டன. இவ்விடங்கள் இப்போது பாகிஸ்தான் நாட்டில் உள்ளன. இவையேயன்றி, சானுடாரோ, கோட்டீஜி, லோதால், காளிபங்கன் என்னும் இடங்களிலும் அகழ்வாராய்ச்சிகள் புரிந்து பண்டைய நாகரிகச் சின்னங்களைக் கண்டுபிடித்துள்ளனர். இந்நான்கு இடங்களும் இந்திய நாட்டு எல்லைகளுக்குள் அமைந்துள்ளன: முதன்முதல் சிந்துவெளி நாகரிகத்தைப்பற்றி விரிவான ஆராய்ச்சிகள் செய்து அரிய பெரிய கருத்துகளையும், விளக்கங்களையும், வரலாற்றுத் துறைக்குத் தந்துதவியவர் சர் ஜான் மார்ஷல் ஆவர்.

வரலாற்று உலகை வியப்பிலும் திகைப்பிலும் ஆழ்த்திய பல பொருள்கள் இந்நகரங்களில் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன. சில ஆயிரம் ஆண்டுகட்கு முன்பு சிந்துவெளி முழுவதும் பரவியிருந்த ஒரு பெரும் நாகரிகத்தின் சின்னங்களாம் அவை. கட்டடங்களைச் செப்பனிடுவதிலும், நகரத்தின் அமைப்பிலும் மொகஞ்சதாரோ, ஹாரப்பா ஆகிய இரு நகரங்களிடையே மிக நெருங்கிய ஒற்றுமைப்பாடுகள் பல காணப்படுகின்றன. ஆதிகாலத்தில் மொகஞ்சதாரோ செழிப்பானதொரு நகரமாக விளங்கியதாகவும், பிறகு அது வெள்ளத்தில் மூழ்கி மண்மேடிட்டுப் போனதாகவும் அதன்மேல் வேறொரு நகரம் எழுந்ததாகவும், அஃதும் பிறகு வெள்ளத்தில் அழிந்து போகவே அதன்மேல் மற்றுமொரு நகரம் அமைக்கப்பட்டதாகவும், அஃதும் வெள்ளத்தில் மூழ்கிப் போகவே மீண்டும் ஒரு நகரம் அமைக்கப்பட்டதாகவும், இவ்வாறே ஏழு நகரங்கள் ஒன்றன்மேல் ஒன்றாக எழுந்து அவை

அனைத்தும் மண்ணில் புதையுண்டு போனதாகவும் தெரிகின்றது. அல்லது தோன்றிய ஒவ்வொரு நகரும் எதிரிகளால் அழிக்கப் பட்டிருக்கக் கூடுமென்றும் சிலர் கருதுகின்றனர்.

மொகஞ்சதாரோவிலும், ஹாரப்பாவிலும் ஊருக்குப் புறத்தே கோட்டை கொத்தளங்கள் கட்டப்பட்டிருந்தன. அக் கோட்டைகளுக்குள் மன்னரின் மாளிகைகளும், பெரிய பெரிய நீராடுங்குளங்களும், நேருக்கு நேரான சாலைகளும், பெரிய வீடுகளும், நெற்களஞ்சியங்களும் அமைக்கப்பட்டிருந்தன. கோயில் குருக்கள் குடியிருப்பதற்காகவே தனித்தனி வீடுகள் ஒதுக்கப்பட்டிருந்தன. மொகஞ்சதாரோவில் உள்நாட்டு வெளி நாட்டு வாணிகங்கள் செழிப்புடன் நடைபெற்றுவந்தன. அயல் நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட உணவுத்தானியங் கள் களஞ்சியங்களில் சேர்ப்புக் கட்டி வைக்கப்பட்டன. உலோகங்களும் நவமணிகளும் அயல்நாடுகளிலிருந்துதாம் இறக்குமதியாயின. மொகஞ்சதாரோ குடிமக்கள் அழகழகான மட்பாண்டங்கள், மண்பொம்மைகள், வெண்கலச் சிலைகள் ஆகியவற்றைச் செய்வதற்குக் கைவன்மையும் கலையுணர்ச்சியும் வாய்க்கப் பெற்றிருந்தனர். களிமண் முத்திரைகளும் செப்பேடு களும் இந் நகரில் ஏராளமாகக் கிடைத்துள்ளன. முத்திரை களிலும் செப்பேடுகளிலும் பொறிக்கப் பெற்றுள்ள எழுத்துகள் இன்னமொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவை என்ற உண்மை இன்னும் திருத்தமாக விளக்கப்படவில்லை. செப்பேடுகளில் ஒரு வரி இடம்-வலமாகச் செல்லுகின்றது; அடுத்த வரி வலம் இடமாக வருகின்றது. இவ்வெழுத்துகள் சித்திர முறையும் ஒலி முறையும் இணைந்து பிறந்தவை என்று ஆய்வாளர் ஊகிக்கின்றனர். இச் சிந்துவெளி மொழியில் மொத்தம் முந்நூறு குறிகள் காணப்படுகின்றன. அவற்றுள் இருநூற்றைம்பது குறிகள் அடிப்படையானவை. ஏனையவை சார்பு குறிகள்.

சிந்துவெளி மக்களின் சித்திர எழுத்துகளில் மறைந்துள்ள செய்திகள் யாவை என்பதை அறிந்து கொள்ள வரலாற்று ஆய்வாளர்கள் விஞ்ஞானத்தின் துணையை நாடிவருகின்றனர். பல அறிஞர்கள் இந்த எழுத்துகளைப் பல்வேறு கோணங்களில் ஆராய்ந்து பல்வேறு கருத்துகளை அவ்வப்போது வெளியிட்டு வந்துள்ளனர். ஒருசாரார் சிந்துவெளி மொழியானது பண்டைய தமிழ் வடிவமே என்று கூறிவருகின்றனர். இவர்களுள் முதன்மை யானவர் ஹீராஸ் பாதிரியார் ஆவார்.

ஹீராஸ் பாதிரியார் தம் கொள்கைக்குச் சார்பாகப் பல சான்றுகளைக் காட்டியுள்ளார். இவர் இவ்விரு மொழிக்கு

மிடையே பல ஒற்றுமைகளைக் கண்டார். இவருடைய கொள்கையைச் சில ஆய்வாளர் பொருத்தமற்றதெனப் புறம்பே ஒதுக்கினர். ஆனால், இக் காலத்தில் விஞ்ஞானமுறையில் நடைபெற்றுவரும் ஆராய்ச்சிகள் பாதிரியாரின் கொள்கையை மெய்ப்பித்து வருகின்றன.

ரஷியா, பின்லாந்து ஆகிய நாட்டு ஆய்வாளர் சிலர் மொகஞ்சதாரோ மொழியை விஞ்ஞான முறையில் ஆராய்ந்து அம்மொழி திராவிட மொழியின் தொடக்க உருவமேயாம் என்று முடிவுகட்டியுள்ளனர். சிந்துவெளி எழுத்துகளை ஆராயும் பணியில் முனைந்துள்ள திரு. ஐ. மகாதேவன் அவர்களும் சிந்துவெளி மொழிக்கும் தமிழ்மொழிக்குமிடையே நெருங்கிய தொடர்பைக் காண்கின்றார். சிந்துவெளி எழுத்துகளுக்குத் தாம் ஓரளவு விளக்கங் கண்டுள்ளதாகவும் அவர் கூறுகின்றார். அவ்வெழுத்துகள் சித்திரமும் ஒலிக்குறிப்பும் இணைந்து வடிவமைப்புப் பெற்றிருப்பதால் இன்றைய தமிழில் அவையனைத்தையும் பெயர்த்தெழுத வியலாதவராயுள்ளார்.

தம் கருத்துக்குச் சார்பாகத் திரு. ஐ. மகாதேவன் கீழ்க் காணும் சான்றுகளை எடுத்துக்காட்டுகின்றார்.

1. மொகஞ்சதாரோ முத்திரைகளின்மேல் பொறிக்கப்பட்டுள்ள எழுத்துகளுக்கும் கி. மு. இரண்டு மூன்றாம் நூற்றாண்டுகளில் பொறிக்கப்பட்ட தமிழ்-பிராமி எழுத்துகளுக்குமிடையே பல இயைபுகள் காணப்படுகின்றன. இவ்வெழுத்துகள் வெளியிடும் செய்திகள் அனைத்துமே கடவுள் மாட்டுக் கொடுத்துக்கொள்ளும் விண்ணப்பங்களாக அமைந்துள்ளன.

மொகஞ்சதாரோ முத்திரை எழுத்துகள் தெய்வ முறையீடுகளைப்போலக் காணப்படினும், இவற்றுக்கும் தமிழ்-பிராமி எழுத்துகளுக்குமிடையே இணக்கம் ஏதும் இருப்பதாகத் திட்டமாகக் கூறுவதற்கில்லை. அப்படிக் கூறுவதற்குத் திரு. மகாதேவன் காட்டும் சான்று போதாது எனத் தோற்றுகின்றது.

2. தென்னிந்தியாவில் அகழ்ந்தெடுக்கப்பட்ட பெருங்கற் புதைவுகளில் கிடைத்துள்ள பானையோடுகளின்மேல் வரையப்பட்டுள்ள கீற்றோவியங்களும் சிந்துவெளி ஓடுகளின்மேல வரையப்பட்டுள்ள கீற்றோவியங்களும் ஒரேவிதமாகக் காணப்படுகின்றன.

இங்கு ஒன்று நாம் நினைவில் கொள்ளவேண்டும். தென்னிந்தியப் பெருங்கற் புதைவுகளைப்பற்றிய ஆராய்ச்சி இன்னும்

தொடக்கநிலையிலேயே உள்ளது; முடிவு பெறவில்லை. அப் புதைவுகளில் கண்டெடுக்கப்பட்ட பல பொருள்களுக்கு விளக்கங் காணவேண்டியுள்ளது. இன்னும் பல புதைவுகளின் ஆராய்ச்சி முற்றுப்பெறவில்லை. எனவே, இந்நிலையில், தென்னிந்தியப் புதைவுகளில் கண்டெடுக்கப்பட்ட பானையோட்டு எழுத்துக ளுக்கும் சிந்துவெளி எழுத்துகளுக்கும் பொருத்தங் காண முயல்வது நற்பயன் அளிக்க வல்லது என எண்ணுவதற்கில்லை. முடியுமோ என்று திட்டவட்டமாய்க் கூற முடியாது.

3. சிந்துவெளி முத்திரைகளின்மேல் மக்களின் இடுகுறிப் பெயர்களும், சிறப்புப் பெயர்களும் எழுதப்பட்டுள்ளன. இப் பெயர்களைத் தமிழ்-பிராமிக் கல்வெட்டுகளிலும், சங்கச்செய்யுள்களிலும், பதிகங்களிலும் காணலாம்.

இவ் வொருமைப்பாட்டை ஒப்புக்கொள்ளும் முன்னர்ச் சிந்து வெளிப் பெயர்களைப்பற்றிய விளக்கம் பொருத்தமானது தானா என்பதை நாம் ஆராய்ந்தறிய வேண்டும். சிந்துவெளி எழுத்தாராய்ச்சியானது இன்னும் தொடக்கநிலையிலேயே நிற்கின்றது. ஆகவே, திரு. மகாதேவன் கொண்டுள்ள இம் முடிவை ஓர் ஊகமாகவே நாம் ஏற்றுக்கொள்ள வேண்டியவர்க ளாக உள்ளோம்.

4. சிந்துவெளி அரசியலும், பழந்தமிழர் அரசியலும் ஆகிய இரண்டுமே மிகத் திறம்பட நடைபெற்றுவந்தன. இஃதும் சிறப் பானதோர் ஒற்றுமையாகும்.

திரு. மகாதேவன் காணும் இவ் வியைபில் தெளிவு இல்லை. முற்பட்டு நிலவி மறைந்தொழிந்ததொரு நாகரிகச் சின்னங்க ளுடன் பிற்காலத்து வழங்கிய நாகரிகம் ஒன்றன் சின்னங்களை ஒப்பிட்டு உண்மை நாடுவது ஆராய்ச்சி விதிகளுக்கு முரண் பாடாகும்.

5. சிந்துவெளி முத்திரைகளின்மேல் காணப்படும் சில குறிகள் ஒருவருடைய பெயருக்கு முன்பு இணைந்துவரும் அவருடைய ஊரைத் தெரிவிப்பதாக இருக்கலாம். சங்க கால இலக்கியத்திலும், பிற்பட்ட இலக்கியங்களிலும் மக்கள் பெயர் கட்கு முன்பு அவர்களுடைய ஊரின் பெயர் இணைந்துவருவது உண்மைதான். சிந்துவெளி எழுத்துகளில் 'நகரம்' என்பதைக் குறிப்பிடும் குறியீடுகளானவை 'நகரம்' என்ற பெயரைக் காட்டும் எழுத்துச் சித்திரங்களைப் போலவே தோற்று கின்றன. தம் பெயர்களுக்கு முன்பு தாம் பிறந்த ஊரின் பெயரை இணைத்துக்கொள்ளும் மரபு சிந்துவெளி மக்க

ளுக்கும் சங்ககாலத் தமிழ் மக்களுக்கும் பொதுவான தொன்றாகத்தான் காணப்படுகின்றது. எனினும், மேலும் திட்டமான சான்றுகளைக் கொண்டுதான் இதைப்பற்றி ஒரு முடிவுக்கு வரவேண்டும். சிந்துவெளி எழுத்துக்களை மேலும், பலர் ஆராய்ந்து வருகின்றனர். தாம்தாம் ஆராய்ந்தறிந்தவாறு குறியீடுகளுக்கு அவர்கள் விளக்கம் தந்துள்ளனர். குறிப்பிட்ட ஒரு குறியீட்டுக்குப் பல பொருள்கள் கற்பிக்கப்பட்டுள்ளன. அவ் வாய்வாளர்களிடையே ஏதும் உடன்பாடு தோன்றவில்லை. எடுத்துக்காட்டாக, சிந்துவெளி எழுத்துக்களில் அடிக்கடி ஒரு குறி வருகின்றது, மூடியில்லாத ஒரு பாண்டம் போல அது தோற்று கின்றது. அக் குறி அரசமரத்தைக் குறிப்பிடுகின்றதென ரஷிய ஆய்வுக் குழுவினர் கூறுவர்; அது மரக்கலம் ஒன்றைக் குறிப் பிடுவதாகப் பின்லாந்து ஆய்வாளர் கூறுகின்றார்; அது வேற்றுமை உருபு ஒன்றைக் குறிப்பிடுகின்றதென லாங்டன் என்பார் கருதுகின்றார். அதை எகிப்திய, சுமேரிய எழுத்து களுடன் ஒப்புநோக்கி அது கைப்பிடிகளையும், மூக்கையும் கொண்ட சாடி ஒன்றைக் காட்டுகிறதென்று ஹன்டர் என்ற அறிஞர் எண்ணுகின்றார். இவருக்கு மாறாகக் கைப்பிடிகளையும் மூக்கையும் கொண்டு அடி குவிந்த பாண்டம் ஒன்றை இக் குறி அறிவிப்பதாகத் திரு. மகாதேவன் அவர்களே கருதுகின்றார். ஆகவே, சிந்துவெளிக் குறியெழுத்துக்களைப்பற்றிய விளக்கம் எதையும் ஐயப்பாடின்றி ஏற்றுக்கொள்ளாத நிலையில் நாம் இன்று உள்ளோம்.

6. பண்டைய சங்க இலக்கியங்களில் கற்பனை செய்யப் பட்டுள்ள புராணக் கதைகளுக்கும், சிந்துவெளி முத்திரைகளின் மேல் பொறிக்கப்பட்டுள்ள சித்திரக் காட்சிகள் சிலவற்றுக்கு மிடையே ஓர் ஒற்றுமையைக் காணலாம்.

பலமுனைச் சான்றுகளின்றி இதையும் நாம் திட்டவட்டமாய் ஏற்றுக்கொள்ள வியலவில்லை. மேற்கொண்டு நடைபெற்றுவரும் ஆராய்ச்சிகளின் வாயிலாக ஒருவேளை இவ் வறிகுறியின் கருத் துக்குச் சார்பாகப் புதிய சான்றுகள் கிடைக்கக்கூடும்.

இந்திய அரசாங்கத்தின்கீழ்ப் புதைபொருள் ஆராய்ச்சியில் பணியாற்றி வரும் திரு. எஸ். ஆர். ராவ் என்பவர் சிந்துவெளி நாகரிகத்தைப்பற்றிய ஆராய்ச்சியிலீடுபட்டுள்ளவர். இவருடைய முயற்சியின் பயனாகக் குசராத் மாநிலத்தில் புதையுண்டு கிடந்த லோதால் என்ற பழந் துறைமுகப்பட்டினம் ஒன்று வெளியாயிற்று. அந் நகரத்து நாகரிகமும் மொகஞ்சதாரோ நாகரிகமும் நெருங்கிய தொடர்பு உடையன என்று அவர் கருதுகின்றார்.

சிந்துவெளி நாகரிகம் குசராத் கடற்கரை வரையில் பரவியிருந்த தென்ற அரியதொரு உண்மையை வெளியாக்கிய பெருமை இவரைச் சாரும். சிந்துவெளி எழுத்துகளை இவரும் ஆராய்ந்து ஒரு கருத்தை வெளியிட்டுள்ளார். சிந்துவெளி மக்கள் தம் மொழியில் தொடக்கத்தில் ஏறக்குறைய முந்நூறு குறிகளையே கையாண்டு வந்தனர் என்றும், எனினும் காலப்போக்கில், அதாவது கி. மு. 1900-1800 ஆண்டளவில், அவற்றுள் வழக் கொழிந்தன போக, இருபது எழுத்துகளே எஞ்சி நின்றன வென்றும், ஒலிக்குறிப்பு அடிப்படையில் சிந்துவெளி எழுத்துகள் இந்தோ-ஐரோப்பிய மொழிக் குடும்பத்துடன் தொடர்பு கொண்டுள்ளனவே யன்றித் திராவிட மொழிக்கும் அவற்றுக்கும் எத்தகைய தொடர்பும் இல்லை என்றும் அவர் கருதுகின்றார். இதுவரை சிந்துவெளி நாகரிகத்தைப்பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்த அறிஞர்கள் அனைவரும் அந் நாகரிகத்துக்கும் பழந் தமிழர் நாகரிகத்துக்கும் இடையே ஓரளவு இணக்கத் தையே உருவாக்கி வந்துள்ளனர். இதற்கு முற்றிலும் மாறு பாடாகக் காணப்படுகின்றது திரு. ராவ் அவர்களின் கொள்கை. மிக அண்மையில் இவருடைய கருத்து வெளிவந்துள்ளதாகை யால் அதைப்பற்றி மேலும் ஆழ்ந்த ஆராய்ச்சி மேற்கொள்ள வேண்டியிருக்கின்றது. தற்போது இவர் இவ்வாராய்ச்சியில் தொடர்ந்து ஈடு பட்டுள்ளார்.

சிந்துவெளி நாகரிகத்தை ஆரிய நாகரிகத்துடன் வேறு சிலரும் ஒப்பிட்டுள்ளனர். சிந்துவெளி எழுத்துகள் மிகப் பழங்கால வேதமொழி எழுத்துகளுடன் தொடர்புடையன என்றும், களிமண் முத்திரைகளின்மேல் காணப்படும், விலங்கு களின் வடிவங்கள் ஆரியரின் வேள்விகளையும் அவற்றில் பலி யிடப்பட்ட விலங்குகளையும் குறிப்பன என்றும் சிலர் கருது கின்றனர். ஆரியர்கள் வேள்விகளில் பசுக்களையும் ஆடுகளையும் பலியிடுவது வழக்கம். ஆனால், மொகஞ்சதாரோ முத்திரைகளின் மேல் யானையின் உருவங்களும், காண்டாமிருகங்களின் உருவங் களும் பொறிக்கப்பட்டுள்ளன. எக்காலத்திலும் இவ் விலங்குகள் ஆரியரின் வேள்விகளில் பலியானதில்லை. எனவே, மொகஞ்ச தாரோ மொழியுடன் ஆரிய மொழி எவ் விதத்திலும் தொடர் புடையதன்று என்று கொள்ளலாம்.

இதுவரையில் கிடைத்துள்ள சான்றுகளைக் கொண்டு கி. மு. 1200 ஆண்டுகளுக்கு முன்பு வட இந்தியாவில் ஆரிய நாகரிகம் தோன்றியிருக்க முடியாது என்பது வரலாற்று ஆய்வாளர்கள் கொண்டுள்ள முடிபாகும். இருக்கு அதர்வண

வேதங்களில் காணப்படும் இலக்கிய அமைப்பைக் கொண்டும் புதைபொருள் சான்றுகளைக் கொண்டும் ஆரிய நாகரிகமானது கி.மு. *1100-1000* ஆண்டுகளில் தோன்றியிருக்கலாம் என்று சிலர் கருதுகின்றனர். சிந்துவெளி நாகரிகம் மறைவுக்கும் இந்திய நாட்டுக்குள் ஆரியர் நுழைந்ததற்கும் இடையில் பல நூற்றாண்டுகள் கழிந்து போயினவாதலின் சிந்துவெளி நாகரிகத்தை ஆரியரின் நாகரிகமாகக் கொள்ளலாகாது. மேலும், ஆரிய நாகரிகம் நாட்டுப்புறத்தோடு ஒன்றி வளர்ந்து வந்துள்ளது. ஆனால், சிந்துவெளி மக்கள் பெரிய பெரிய நகரங்களை அமைத்துக் கொண்டு வாழ்ந்து வந்தவர்கள்; அவர்களுடைய நாகரிகம் நகர்ப்புறத்து நாகரிகமாகும். மொகஞ்ச தாரோ முழுவதும் செங்கல்லால் கட்டப்பட்டதொரு நகரமாகக் காட்சியளிக்கின்றது. அதன் அழகிய தெருக்கள் யாவும் திட்டமிட்டு அமைக்கப்பட்டன. சொக்கட்டான் கோடுகளைப் போல அவை நேர் நேராக ஓடுகின்றன. நகரத்தின் சுற்றளவு சுமார் *3, 4* கி. மீ. இருக்கும். கடல் போல விரிந்தோடிய சிந்து நதிக்கரையின்மேல் அந்நகரம் அமைந்திருந்தது. நாட்டுப் புறங்களில் சிற்றூர்களில் வாழ்ந்து வந்த ஆரியரின் பொலிவற்ற நாகரிகத்துக்கும், திகைப்பூட்டும் வாழ்க்கை வசதிகள் பலவும் வாய்க்கப்பெற்ற மிகப் பெரும் நகரங்களில் வாழ்ந்துவந்த சிந்துவெளி மக்கள் வளர்த்திருந்த நாகரிகத்துக்கும் இடையே எவ்வளவு வேறுபாடு!

இஃதன்றி, சிந்துவெளிச் சிதைவுகளில் இலிங்க உருவங்கள் பல கண்டெடுக்கப்பட்டுள்ளன. சிந்துவெளி மக்கள் இலிங்க வழிபாடு உடையவர்கள் என இதனால் விளங்குகின்றது. ஆனால், இருக்கு வேதகால ஆரியர்கள் இலிங்க வழிபாட்டை எள்ளிப் புறக்கணித்தார்கள். இலிங்கத்தை வழிபட்டவர்களும், அதைப் பழித்துப் பாடியவர்களும் ஒரே இனத்தவராவர் என்று கூற முடியாது. வேதகால ஆரியர்கள் சிந்துவெளியில் வாழ்ந்தவர்களாக இருந்து பிறகு கங்கை வெளியில் பரவிக் குடியேறியிருப்பார்களாயின் சிந்துவெளிச் சின்னங்களான எழுத்து முத்திரைகளையும், செப்பேடுகளையும் பொறிக்கும் வழக்கத்தையும் தம்முடனே கொண்டு சென்றிருக்க வேண்டும். ஆனால், வேதகால நாகரிகத்தில் இவ்விரண்டும் காணப்படவில்லை.

மேலும், சிந்துவெளி மனிதனின் தலையின் வடிவ அமைப்புக்கும் ஆரியனின் தலையின் வடிவ அமைப்புக்கும் எவ்விதமான இயைபும் காணப்படாதது குறிப்பிடத்தக்கதாகும். ஆரிய

வடிவத்துக்கு முற்றிலும் முரணாகச் சிந்துவெளி மனிதனின் நெற்றியின்மேல் புருவம் ஏறியிருக்கின்றது. அவனுடைய உதடுகள் தடித்துப் பிதுங்கியுள்ளன. மொகஞ்சதாரோ களிமண் முத்திரைகளின்மேல் பசுபதி என்ற உருவில் சிவன் வடிவமும். அம்மன் வடிவமும் மிகச் சிறப்பாக இடம் பெறுகின்றன. ஆனால், இருக்கு வேதக் கடவுளருள் ஒருவரான உருத்திரன் முழு முதற்கடவுளராக ஆ ரி ய ர ா ல் ஏற்கப்படவில்லை. உருத்திரன் 'ரௌத்திராகாரத்தில்' இருப்பதாக இருக்கு வேதம் பேசுகின்றது. ஆனால், சிந்துவெளிப் பசுபதியோ அமைதியாக யோகமுத்திரையுடன் அமர்ந்து காட்சியளிக்கின்றார்.

சிந்துவெளி மக்கள் பின்பற்றி வந்த சமயமானது கோள்கள், விண்மீன்கள் ஆகிய வான மண்டலங்களுடன் மிகவும் நெருங்கிய தொடர்புகொண்டிருந்தது. அவர்கள் வானவியலையும் சோதிட நூலையும் பயின்றவர்களாகக் காணப்படுகின்றனர். அவர்களுடைய வாழ்க்கையில் இவை சிறப்பிடம் பெறுகின்றன. அவர்களுடைய பெயர்களுடன் விண்மீன்களின் பெயர்களும் இணைந்திருந்தன. இக் கூறுபாடுகள் அனைத்தும் வேதகால ஆரியருக்குப் புறம்பானவையாம். ஆதி ஆரிய நாகரிகத்தில் வானவியலும் சோதிடமும் இடம் பெற்றில. பிற்கால ஆரியர்கள் பிற நாகரிகங்களிலிருந்து பல கருத்துகளையும், சொற்களையும் ஏற்றுக் கொண்டனர்.

பறவைகளையும் விலங்குகளையும் தொடர்புறுத்தும் வழக்கம் ஆதி ஆரியரிடமும் காண முடியாது. அஃது அவர்களுடைய சமயத்தில் பிற்காலத்திற்றான் நுழைவுற்றது. விநாயகக் கடவுளின் பெருச்சாளியும், சிவபெருமானின் எருதும், துர்க்கையின் சிங்கமும், முருகக் கடவுளின் மயிலும், திருமாலின் கருடனும் ஆரியர்கள் தமிழரிடமிருந்து ஏற்றுக்கொண்டவையாம். அரசமரத்தைக் குறிக்கும் 'அசுவத்தம்' என்னும் சொல் சிந்துவெளி மக்களிடமிருந்து ஆரியத்தில் புகுந்ததாகும். 'பூஜை' என்னும் சொல் அனாரியச் சொல் என்றும், பூ-செய் என்னும் தமிழ்ச் சொற்றொடர் ஆரியத்தில் பூஜை என மருவி பூஜா எனவாயிற்றென்றும் சுநீத்குமார் சாட்டர்ஜி கூறுவார்.

சிந்துவெளி நாகரிகமும் நகரங்களும் எக்காரணத்தாலோ மறைந்தொழிந்தபின்னர், சிந்துவெளி மக்களுள் ஒருசாரார் கங்கை வெளியில் பரவிக் குடியேறி இருக்கக்கூடும். வேறு பலர் கூட்டங் கூட்டமாகத் தெற்கு நோக்கி வந்து தக்காணத்திலும், தமிழகத்திலும் தங்கிவிட்டிருப்பார்கள். வேதங்களில் பாணிகள் என்றொரு குலத்தினர் குறிப்பிடப்படுகின்றனர். அவர்கள்

வணிகர்கள் என்றும், வட்டிமேல் வட்டியிட்டு வாங்குபவர்கள் என்றும் வேதங்கள் கூறும். இப்பாணிகட்கு வேள்விகளில் ஈடுபாடு கிடையாது; ஆரியக் கடவுளரையும் இவர்கள் வணங்குவதில்லை. ஆரியருக்கும் பாணிகளுக்குமிடையே அடிக்கடி பூசல்கள் நேர்வதுண்டு. பாணிகளின் குடியிருப்புகள் மேல் ஆரியர்கள் படையெடுத்துச் சென்றதாகவும், அதற்காகப் பாணிகள் அவர்கள்மேல் பழிதீர்த்துக் கொண்டனர் என்றும் இருக்கு வேத சுலோகம் ஒன்று தெரிவிக்கின்றது. கங்கை வெளியில் வந்து குடியேறிய சிந்துவெளி மக்களே இப்பாணிகள் என ஊகித்தற்கிடமுண்டு. அவர்களுடன் மூண்ட பூசல்களையும் போர்களையும் பாராட்டாமல், அவர்களுடைய சமயக் கோட்பாடுகளை மட்டும் ஆரியர்கள் ஏற்றுக் கொண்டனர் போலும். சிந்துவெளிக் கடவுளாகிய பசுபதியை ஆரியர்கள் தம் உருத்திரன் நிலையைவிட மேல்நிலைக்கு ஏற்றினார்கள். யோக முத்திரைகளும், சக்தி வழிபாடும், அரச மரமும் ஆரிய சமயத்தில் இடம் பெற்றுவிட்டன.

தம் சமயத்திலும் மொழியிலும் தாம் மீனுக்குக் கொடுத்திருந்த சிறப்பைச் சிந்துவெளி மக்கள் தக்கணத்திலும் தமிழகத்திலும் குடியேறிய பிறகும் மறந்துவிடவில்லை. தமிழ் மொழியிலும் மீனுக்குச் சிறப்பிடம் அளிக்கப்பட்டுள்ளது. தென் பாண்டி நாட்டு மன்னரின் கொடி மீனக்கொடி. விண்ணில் மின்னுவது மீன். தமிழ்ப் பெண்களின் கண்களுக்கு ஒப்பாவது மீன். மதுரையின் கடவுள் பெயர் மீனாட்சி என்பதாகும்.

சிந்துவெளி மக்கள் அனைவரும் ஒருங்கு திரண்டு ஒரே காலத்தில் இடம் பெயரத் தொடங்கித் தென்னிந்தியாவுக்கு வந்து குடியேறினர் என்று கொள்ளுவதற்கில்லை. அவர்கள் பல்வேறு குழுக்களாகப் பல காலங்களில், பலவழிகளில் தனித் தனியாகத் தென்னிந்தியாவுக்கு வந்து குடியமர்ந்தனர்.

மத்தியதரைக் கடற்பகுதி மக்களும், சிந்துவெளி மக்களைப் போலவே பல தொகுதியாகப் பல காலங்களில் தென்னிந்தியாவுக்கு வந்து குடியேறியவர்கள்தாம். அவர்கள் வடமேற்கு இந்தியா, சிந்துவெளி, கங்கைவெளி ஆகியவற்றின் வழியாகத் தான் தமிழகத்துக்கு வந்தார்கள் என்று கொள்ளமுடியாது. சிலர் அவ்விதம் வந்திருக்கலாம். அவர்களுள் ஒருசாரார் கடல் கடந்து வந்து தமிழகத்தின் மேலைக்கடற்கரையில் குடியேறினர் எனக் கருதலாம். பொதுவாக சிந்துவெளி நாகரிகத்துக்கும் தமிழருக்கும் தொடர்பு இருந்ததெனவே கருதலாம்.